Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 22 செவ்வாய்க்கிழமை (06.01.2015) பக்கங்கள் 20 ஓசை – 098

# அதிகாரப் பகிர்வுக்கு மைத்திரி தயார் இல்லை

* படைக்குறைப்பு இல்லை * அதிகாரப் பகிர்வு இல்லை * புரிந்துணர்வு ஒப்பந்தமும் இல்லை
* படை முகாம்கள் அப்படியே இருக்கும்

## ஊடக மாநாட்டில் அவரே அறிவிப்பு

(கொழும்பு)

அதிகாரங்களை பரவலாக்குவதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும் எந்த ஏற்பாடுகளையும் நாம் செய்யவில்லை என்றும், இந்த விடயம் தொடர்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் நாம் எந்த உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளவில்லை என்றும் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தான் வெற்றிபெற்ற பின் வடக்கில் அமர்த்தப்பட்டுள்ள இராணுவத்தினரை அங்கிருந்து அகற்றி நாட்டை பிரிக்கப் போவதாக ஆளும்கட்சி பொய்யான தகவல்களை பரப்பி வருவதாக குற்றம் சாட்டினார்.

இவ்வாறான தகவல்களை முழுமையாக நிராகரித்த மைத்திரிபால சிறிசேன, வெற்றியின் பின்பு நாட்டின் ஒருமைப்பாட்டை காப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் தாம் எடு

19 ஆம் பக்கம் பார்க்க...

## மைத்திரியை ஆதரிப்பது தவறு

### மற்றுமொரு கூட்டமைப்பு உறுப்பினர் போர்க்கொடி

தமிழ் மக்களின் தேசியம் நோக்கிய பயணத்தைத் தொடர, இத் தேர்தலைப் புறக்கணித்தல் அல்லது வாக்கினை செல்லுபடியற்ற தாக்குதலே சிறந்தது. இது குறித்து நான் முதல் நடந்த கூட்டத்தில் கூட்டமைப்புத் தலைமைக்கு வலியுறுத்தினேன். வேறு சில உறுப்பினர்களும் வலியுறுத்தினர். ஆனால் எமது கருத்தை அவர்கள் உள்வாங்கவில்லை.

இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் வடக்கு மாகாண சபையின் மன்னார் மாவட்ட உறுப்பினர் ஞா.குணசீலன். கூட்டமைப்பு ஏற்

19 ஆம் பக்கம் பார்க்க...

## கூட்டமைப்பு நகரசபை உறுப்பினர்கள் இருவர் அரசு பக்கம் தாவல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக்குட்பட்ட வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள் இருவர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு கட்சி தாவியுள்ளனர்.

உறுப்பினர்களான ஜெ.ஜெயராஜா, எம்.மயூரன் ஆகியோரே இவ்வாறு கட்சி தாவியுள்ளனர் என்று நேற்று இரவு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி 5 ஆயிரம் அலுவலர்கள் கடமையில்

### யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் கடமையாற்றுவதற்கு 5 ஆயிரம் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பு ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று தெரிவித்தார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் ஒழுங்குகள் பற்றி ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் 4 இலட்சத்து 50 ஆயிரத்து 132 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் வாக்களிப்பதற்கு 526 வாக்களிப்பு நிலையங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்த வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றுவதற்கு 5

19 ஆம் பக்கம் பார்க்க...

## தமிழர்களுக்கான தீர்வை மைத்திரியிடம் எதிர்பார்க்க முடியாது

### அது அவரிடம் இல்லை



(யாழ்ப்பாணம்)

பொது எதிரணியால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயம் தொடர்பில் எவ்விதமான விடயங்களும் உள்ளடக்கப்படவில்லையென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய தொலைக்காட்சியான தந்தி தொலைக்காட்சிக்கு நேற்று 'ஸ்கைப்' ஊடாக நேரடியாக வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அமைச்சரிடம் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கும் போது தமிழ் மக்களின் ஏகபிரதி நிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

கிடைக்கப்பெற்ற பல வாய்ப்புகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சரியாக பயன்படுத்தவில்லை. குறிப்பாக, வடமாகாண சபைத் தேர்தலின் போது மூன்றிலிரண்டு

19 ஆம் பக்கம் பார்க்க...

## தேர்தல் அதிகாரிகள் மீதும் தாக்குதல்; கிழக்கில் தேர்தல் வன்முறை

திருகோணமலை நகரில் சிலர் தேர்தல் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

டிஜிட்டல் திரைகள் சில வற்றை கண்காணிப்பதற்காக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட குழுவினர் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் தேர்தல் அதிகாரிகளின் கையடக்கத் தொலைபேசிகளையும் கையகப்படுத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க தூதரகம் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்ய முஸ்தீபு

### பொதுபலசேனா ஏற்பாடு

அமெரிக்க சஞ்சிகையொன்றில் வெளியான கட்டுரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்கத் தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்ளப்போவதாக பொதுபலசேனா தெரிவித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக பொதுபலசேனாவை அவமானப்படுத்துவதற்காகவே குறித்த கட்டுரை பிரசுரமாகியுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

எனவே தாம் அமெரிக்க தூதரகத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளவும், அமெரிக்க அரசாங்கத்துடன் நேரடியாக இது குறித்துப் பேச்சு நடத்தவும் தீர்மானித்துள்ளனர் என்று பொதுபலசேனாவினர் தெரிவித்துள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க...

வடக்கு கிழக்கில் மாவையாரின் அகிம்சைப் போர் ஆரம்பித்ததாகச் செய்திகள் எதுவும் வராத 6 வது நாள்



# பெரும்பாலான நிலங்களை மீட்டு மக்களிடம் கையளித்துள்ளோம்

### வலி. மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

முப்பது ஆண்டுகால போரில் இராணுவத்தின் வசமிருந்த தமிழ் மக்களின் நிலங்களில் பெரும்பாலானவற்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீட்டுக் கொடுத்துள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் வலிகாமம் பகுதி அமைப்பாளரும் வலி. மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

அராலியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எஞ்சியுள்ள நிலங்களையும் உரியவர்களிற்கு மீட்டுக்கொடுப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

நாம் அரசுடன் இணைந்து கொண்டு தமிழ் மக்களிற்கு துரோகம் செய்வதாக எதிர்த் தரப்பினர் விஷமப்பிரசாரங்களை மேற்கொண்டுள்ளனர்.

மக்களிற்கு தேவையான சகல வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்காகவே அரசுடன் நாம் இணைந்துள்ளோம்.

பல வருடங்களாக செயற்படாதிருந்த மாகாண சபையையும், 24 வருடங்களாக தடைப்பட்டிருந்த புகையிரத சேவையையும் அமைச்சரின் இணக்க அரசியல் ஊடாகவே வடக்கு மக்களிற்கு பெற்றுக் கொடுத்துள்ளோம்.

இவற்றை விடவும் போரில் மரணித்தவர்களிற்காக வருடத்தில் ஒரு நாளை புனித நாளாக சட்டபூர்வமாக அனுஷ்டிப்பதற்கும், போரில் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கும், குடாநாட்டிலுள்ள இராணுவத்தினரில் ஒரு பகுதியினரை மட்டுப்படுத்துவதற்கும், எஞ்சியுள்ள நிலங்களை மீட்பதற்கும் அமைச்சர் உறுதி பூண்டுள்ளார்.

பல சமூகநல மேம்பாட்டு திட்டங்களையும் உள்ளடக்கிய அமைச்சரின் கோரிக்கைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உட் சேர்த்திருக்கின்றனர். எனவே நிச்சயம் தாம் கூறியவற்றை அமைச்சர் பெற்றுத் தருவார் எனவும் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பிரதேச அபிவிருத்திக் குழு செயலாளர் நா. அருணகிரிநாதர் மற்றும் இளைஞர் அணியின் உப தலைவர் சி.சோமலோஜன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

# தேர்தல் கண்காணிப்பு செயலமர்வு

தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடும் கபே அமைப்பின் தொண்டர்களுக்கான கண்காணிப்பு தொடர்பான செயலமர்வு இன்று இடம்பெறவுள்ளதாக கபே அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.மயூரன் தெரிவித்தார்.

யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை இச்செயலமர்வு இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 300 பேர் வரையில் இத்தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர். இவர்களுக்கான செயலமர்வு இன்று இடம்பெறுகின்றது என்றார். (இ)

# அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும் பரிசுத்தினமும்

(திருநெல்வேலி)

சுன்னாகம் வாழ்வக நிறுவனர் அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும் பரிசுத் தினமும் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணியிலிருந்து பி.ப. 1.00 மணிவரை வாழ்வக செல்லா மண்டபத்தில் வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும், சிறப்பு அதிதிகளாக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன், சட்டத்தரணி ஆ.தியாகராஜா, சமூக சேவைத் திணைக்கள மாவட்ட அலுவலர் வ.செல்லம், பா.ஜெயபாலன் ஆகியோரும் கௌரவ அதிதியாக தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சேவையாளர் கௌரவிப்பு, பரிசில் வழங்கல், கலை நிகழ்வுகள், இணுவையூர் கோபிதாஸ் குழுவினரின் வயலின் இசை விருந்து ஆகியன இடம்பெறும். (137)



அளவெட்டி மேற்கு கிராம முதியோர் சங்கம் 2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற அளவெட்டி மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெற்றபோது கிராம அலுவலர் சு.பூபாலசிங்கம் உரை நிகழ்த்துவதையும், கௌரவிக்கப்பட்டவர்களையும் காணலாம். (63)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப்பாடல்கள்) |
| Am 07.00 | காலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time (Live) |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | அதிர்வுகள் |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## தபால் புகையிரதம்

கொழும்பில் இருந்து காலை 7.45 மணிக்கு புறப்பட்டு தபால் புகையிரதம் பி.ப. 5.08 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். பி.ப. 5.15 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு பி.ப. 5.26 மணிக்கு சுன்னாகத்தை சென்றடையும். பின்னர் பி.ப. 6.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு பி.ப. 6.48 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடையும். பின்னர் பி.ப. 7.10 மணிக்கு கொழும்பு நோக்கி புறபபடும்.

இந்த ரயில் சேவையானது தினமும் மாவட்டபுரம், தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம், இணுவில், கோண்டாவில், கொக்குவில், யாழ்ப்பாணம் ஆகிய நிலையங்களில் தரித்துச் செல்லும். 3 ஆம் வகுப்பு கட்டணமாக யாழ்ப்பாணத்திலிருந்து மாவிட்டபுரத்துக்கு 30 ரூபாவும், யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகத்துக்கு 20 ரூபாயும் யாழில் இருந்து கோண்டாவிலுக்கு 10 ரூபாயும் அறவிடப்படும்.

## பாதிப்பு ஏற்படாது

ஜனாதிபதித் தேர்தலுக்கான சேவையில் நாளைமறுதினம் ஈடுபடுவதற்கு வழங்கப்படவுள்ள சிற்றூர்திகளால் மக்களுக்கு எது விதமான அசௌகரியங்களும் ஏற்படாது எனவும் அட்டவணையிடப்பட்ட நேரத்திற்கு வழமை போன்று அனைத்து சேவைகளும் இடம்பெறும் எனவும் யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் அறிவித்துள்ளார்.

## பருத்தித்துறை பிரதேச வைத்தியசாலையில் பெரும் தாதியர் பற்றாக்குறை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 60 தாதியர்கள் கடமையாற்றவேண்டிய நிலையில் தற்போது 41 தாதியர்களே கடமையாற்றி வருவதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக வைத்தியசாலை அத்தியட்சகர் வேலுப்பிள்ளை ஜெயராஜா நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், எமது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு, 10 நோயாளர் விடுதி, சத்திர சிகிச்சை பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, மாதாந்த வைத்திய பரிசோதனை பிரிவு, அவசர சிகிச்சை என்பனவற்றில் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2014 ஆம் ஆண்டு மேற்கொண்ட கணக்கெடுப்பில் 60 தாதியர்கள் வைத்தியசாலைக்கு தேவையென கணக்கெடுக்கப்பட்டது. ஆனால் தற்போது 41 தாதியர்களைக் கொண்டு வைத்தியசாலை பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

சில தாதியர்கள் காலையில் பணிக்கு வந்து மதியம் அவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டு, இரவு மீண்டும் கடமைக்கு அழைக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இதனால் தாதியர்கள் உடல், உள ரீதியில் பாதிப்படைகின்றனர் என அவர் மேலும் கூறினார். (68)



பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய (சிவன் கோவில்) திருவாதிரைத் திருவிழா நேற்றுக் காலை வெகு சிறப்பாக பூசை வழிபாடுகளுடன் இடம்பெறுவதைக் காணலாம். (63)

# மறு அறிவித்தல் வரை யாழ்நகரில் வீதிகள் மூடப்படும்

## யாழ்.மாவட்ட பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு யாழ்.நகரில் 5 வீதிகள் மறு அறிவித்தல் வரை மூடப்படவுள்ளதாக யாழ்மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவிவைத்தியலங்கார தெரிவித்துள்ளார்.

காந்தி வீதி (பொலிஸ்நிலையவீதி) முதலாம் குறுக்கு வீதி ஏ9 வீதிவரை நீதிமன்ற வீதி, பூங்கா வீதி, புல்லுக்குளம் சந்தியிலிருந்து வேம்படி சந்தி வீதி வரையான வீதிகள் இன்று மாலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும்.

இவ்வீதியை விசேட தேவைகளுக்குப் பயன்படுத்துவோர். யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.பீ.விமலசேனாவுடன் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அசௌகரியங்களை தடுக்கும் வகையில் பொதுமக்கள் 2 ஆம் குறுக்கு வீதி, ஆஸ்பத்திரிவீதி, பிரதான வீதி, ஏ9 வீதி என்பவற்றைப் பயன் படுத்துமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

# மஹோற்சவ தேர்த்திருவிழா



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா உற்சவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கண்ணகை அம்மனுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து தேரில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருட்காட்சி வழங்கினார். இவ் இரதோற்சவத்தில் பெருந்திரளான அடியவர்கள் கலந்து கொண்டு அம்மனின் அருளைப் பெற்றுக் கொண்டனர். (63)

# சமுர்த்தி முத்திரை கொடுப்பனவு இவ்வருடம் முதல் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சி திணைக்களம். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கான உதவிக் கொடுப்பனவுகளை 2015 ஜனவரியிலிருந்து அதிகரித்துள்ளது.

இந்த திணைக்களத்தின் ஊடாக நாடுமுழுவதும் முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மாத்திரம் 53 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முத்திரைப் பயனாளிகள் நன்மை பெறவுள்ளனர்.

இதுதவிர இவ்வருடத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களிலிருந்து மேலும் 17ஆயிரம் பயனாளிகளை புதிதாக இணைத்துக் கொள்ளவிருப்பதாக திணைக்களம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின் பேரில் வழங்கப்படும் இந்த முத்திரைகளின் பெறுமதி அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் பயனாளிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, இந்த உதவிக் கொடுப்பனவுகள் 1 முதல் 2 வரையான அங்கத்தவர்களைக் கொண்டுள்ள குடும்பங்களுக்கு 1000 ரூபாவாகவும் 3 அங்கத்தவரை கொண்டுள்ள குடும்பங்களுக்கு 2000 ரூபாவாவும் 4 அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவரை கொண்டுள்ள குடும்பங்களுக்கு 3000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார பிரச்சினைகளை கவனத்தில் கொண்டு 2015ஆம் ஆண்டு முதல் அதிகரித்த கொடுப்பனவுகளை வழங்க திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மாவட்ட மட்டத்தில் பணியாற்றும் வாழ்வெழுச்சித் திட்ட உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த உதவிக் கொடுப்பனவுகள் மட்டுமன்றி நலிவுற்ற மக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை வாழ்வெழுச்சித் திணைக்களம் முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(24)

## திருமறைக்கலாமன்றத்தால் கலைப்பாடநெறிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியினால் நடாத்தப்படும் கலை வகுப்புக்களுக்கான 2015 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் வாய்ப்பாட்டு, நடனம் (பரதம், கதகளி, மோகினி) வீணை, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், ஓர்கன், கீபோட், ட்றம், ஒக்ரோபாட், சித்திரம், நாடகம், அரங்கியல் மற்றும் சிறப்பு பாடல்களாக கூத்து, கண்டிய நடனம், யோகாசனம், அழகுக்கலை, (முக ஒப்பனை, தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம், தையல்), பண்பாடு (கிறிஸ்தவ கலைகள், சைவசித்தாந்தம்) மற்றும் துணைப்பாடமாக ஆங்கிலம் ஆகிய வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

இப்பாடங்களை பயிலவிரும்புவோர் கல்லூரியில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் வழங்குமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு 3 தினங்கள் பாடசாலைகளுக்கு பூட்டு

எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நாளை முதல் மூன்று தினங்களுக்கு அரச பாடசாலைகள் மூடப்பட்டிருக்குமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி 07, 08, 09 ஆம் திகதிகளில் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும்.

இதேவேளை நேற்றைய தினம் அரச மற்றும் தனியார் பாடசாலைகள் இந்த வருடத்திற்கான முதலாம் தவணைக்காக கல்விச் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளதுடன் எதிர்வரும் ஏப்ரல் 08 ஆம் திகதியுடன் முதலாவது தவணைக் காலத்திற்கான விடுமுறைக்காக மூடப்படுமென கல்வி அமைச்சின் செயலாளர் அனுரதிசாநாயக்க அறிவித்துள்ளார்.

# அப்படியென்றால்...

## தமிழ் பேசும் மக்களில் பலரும் இப்படிக் கேட்கிறார்கள் -

1. மூன்றே மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமயவுடன் உடன்படிக்கை செய்துள்ள மைத்திரி, ஜாதிக ஹெல உறுமய விதித்துள்ள நிபந்தனைகளை ஏற்றுள்ள மைத்திரி ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடும் முஸ்லிம் கட்சிகளோடும் உடன்படிக்கைகளைச் செய்யவில்லை? இவ்வளவுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் 13 பாராளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு கிழக்கு முழுவதும் 40 இற்கு மேற்பட்ட மாகாணசபை உறுப்பினர்களும் 200 இற்கு மேற்பட்ட பிரதேச சபை மற்றும் நகரசபை உறுப்பினர்களும் உள்ளனர். அந்த அளவுக்கு செல்வாக்கும் பலமும் உள்ள கட்சியை ஏன் மைத்திரி பொருட்படுத்தவில்லை?

2. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் கட்சிகளும் மைத்திரிக்கு ஆதரவளிக்கும் மலையகக் கட்சிகளும் ஏன் மைத்திரியிடம் எந்த நிபந்தனையையும் விதிக்கவில்லை. தாம் சார்ந்த சமூகங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அந்தச் சமூகங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் எந்த மாதிரியான கோரிக்கைகளையும் கூட இவை வைக்கவில்லையே! இது ஏன்?

3. எந்த உத்தரவாதத்தையும் பெற்றுக்கொள்ளாத இந்தக் கட்சிகள் எப்படி மைத்திரிக்கு ஆதரவளிக்க முன்வந்தன? மைத்திரி ஆட்சியில் சிறுபான்மைச் சமூகங்களின் பாதுகாப்பும் இருப்பும் உறுதிப்படுத்தப்படுமா? சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் அபிலாஷைகளுக்கான இடம் எப்படியிருக்கும்? மகிந்த ராஜபக்ஸவின் ஆட்சியை விட மைத்திரியின் ஆட்சியில் எத்தகைய முன்னேற்றங்களையும் மாற்றங்களையும் சிறுபான்மைச் சமூகங்களாகிய நாம் பெற்றுக்கொள்வோம்?

3. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் மலையகக்கட்சிகளும் பிற தமிழ்க்கட்சிகளும் இணைந்து ஒரு கூட்டணியை உருவாக்கி, சிறுபான்மைச் சமூகங்களின் வாக்குகளை எல்லாம் ஒன்று திரட்டி வைத்துக்கொண்டு மைத்திரியோடும் மகிந்த ராஜபக்ஸவோடும் பேரம் பேசியிருக்கலாம் அல்லவா. அப்படியான ஒரு சந்தர்ப்பம் இந்தத் தேர்தலில் ஏற்பட்டதல்லவா? யார் வெற்றியடைவார் என்று தெரியாத அளவுக்குக் கடுமையான போட்டி நிலவுகின்ற இந்தச் சூழலில் இதையெல்லாம் ஏன் இந்தத் தலைமைகள் செய்யவில்லை? ஒருவர் முகப்புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதைப்போல பெரிய கட்சியொன்றின் தலைவராகவும் மூத்த தலைவராகவும் இருக்கிற சம்பந்தன் இதைச் செய்யவில்லை? ஏன் அப்படி அவர் சிந்திக்கவில்லை?

4. மைத்திரி தரப்பு நீட்டிய பணத்துக்காக சலங்கையைக் கட்டி தாம் ஆடுவதை விட தமது மக்களையும் ஆடச் சொல்கிறார்களா?

## அப்படியென்றால்

இன்னும் சிறுபான்மைச் சமூகங்கள் தோற்றுக்கொண்டுதானிருக்கப் போகின்றனவா?

இந்தத் தோல்வி மகிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டதையும் விட பெரிய தோல்வியாக இருக்கப்போகிறதா?

## குறிப்பு

1. மாற்றங்கள் வரும் என்றும் பிரச்சினைகள் தீரும் என்றும் கடந்த காலங்களில் சிங்கள மக்களும் வாக்களித்திருக்கிறார்கள். தமிழ் பேசும் மக்களும் வாக்களித்திருக்கிறார்கள். ஆனால் மகிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக்காலத்தில்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு கிட்டாது விட்டாலும் போர் முடிவுக்கு வந்தது. உயிரிழப்பும் அழிவுகளும் முடிவுக்கு வந்தன. இப்பொழுது இதையெல்லாம் பின்னோக்கித் தள்ளக் கூடிய நிலைதான் ஏற்படுகிறதா?

2. சர்வதேச சமூகம் கூட இலங்கையில் ஜனநாயகம் வேண்டும் என்று பொத்தாம் பொதுவாகச் சொல்கிறதே தவிர, சிறுபான்மைச் சமூகங்களின் இருப்பையும் பாதுகாப்பையும் அவர்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வைப் பற்றியும் எதையும் பேசவில்லையே.

## அபிப்பிராயம்

தமிழ் பேசும் தலைமைகள் சிந்திக்காமல் விட்டுவிட்டார்கள் என்பதற்காக மக்களாகிய நாங்கள் சிந்திக்காமல் இருக்க முடியாதல்லவா. இந்தத் தலைமைகளின் சொல்லைக்கேட்டு கடந்த காலத்தில் விட்ட தவறுகளை இனியும் நாங்கள் விடக்கூடாதல்லவா.

- ம.அய்யம்பிள்ளை -

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள்! தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்.

- நெப்போலியன் ஹில்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811. thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழ்மக்களுக்கான மாற்றம் எது?

இலங்கையில் ஜனநாயகம் இல்லை; இலங்கையில் சர்வாதிகாரம் நிலவுகின்றது; குடும்ப ஆட்சி நிலவுகின்றது. இதனால் இந்த அரசாங்கத்தை மாற்ற வேண்டும்; இதற்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டிருக்கிறது.

இதைத்தான் மைத்திரிபாலவும் சொல்கிறார்; ரணில் விக்கிரமசிங்கவும் சொல்கிறார்; சந்திரிகா குமாரதுங்கவும் சொல்கிறார். சரத் பொன்சேகா, சஜித் பிரேமதாச, ஹெல உறுமய, ஜே.வி.பி எல்லோரிடமும் உள்ள கோரிக்கைகள் இவைதான்.

அவர்களது கோரிக்கையே தங்களது கோரிக்கையும்; வித்தியாசமாக ஒன்றுமில்லை என்று அறிவித்ததன் மூலம் இலங்கைத் தேசிய நீரோட்டத்தில் இணைந்து, ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கான தீர்வுதான் முதலில்... அதன்பிறகுதான் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பார்த்துக்கொள்வது என்ற ஞானத்தை அடைந்திருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு, தமிழ் மக்களுக்கு எதைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும், எந்த வேட்பாளர் மூலம் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை சாத்தியமாகப் போகிறது என்று எந்த விளக்கங்களுமில்லாமலே மக்களை வாக்களிக்கச் சொல்லியிருக்கும் ஒரு விநோதத்தை இங்கேதான் நாம் பார்க்கிறோம்.

ரணிலும் சந்திரிகாவும் பொன்சேகாவும், சஜித்தும், சம்பிக்கவும், அத்துரலிய தேரரும், ஜே.வி.பி யும் எதற்காக வாக்களிக்க வேண்டும் என்று அங்கே சொல்கிறார்களோ அதே காரணங்களுக்காகவே தமிழ் மக்களும் வாக்களிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் பிரத்தியேக பிரச்சினைகள் பற்றி எந்த வேட்பாளரிடமும் சென்று பேசமுடியாதவாறு இவர்களை எது தடுத்தது? இரண்டு பேருமே தமிழ் மக்களுக்கு எதையும் தரக்கூடியவர்களில்லை எனவே பணம் தருபவருக்கு வாக்குகளைப் போடச் சொல்வோம் என்றுதான் இந்தத் தேர்தலைப் பயன்படுத்துகிறார்களா?

ஆட்சி மாற்றம் ஒன்று நடந்தால் சிலவேளைகளில் தமிழ் மக்களின் நிலைமையிலும் மாற்றம் வந்தாலும் வரலாம் என்று ஒரு குத்துமதிப்பாக ஆருடம் சொல்பவர்களைக் கேட்டு வாக்களிக்க வேண்டியதாகத்தான் தமிழ் மக்களின் கதி ஆகியிருக்கிறதா?

வடக்கிலிருந்து ஐந்து லட்சம் வாக்குகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி மைத்திரியிடமிருந்து இவர்கள் பணம் பெற்றுக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இப்போது அவ்வளவு வாக்குகள் விழுவது சாத்தியமில்லை என்று தெரிந்ததும் எதிரணித் தலைவர்களுக்குச் சொல்ல காரணங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று தகவல்கள் கசிகின்றன.

எல்லாத் தகவல்களும் தங்களிடையேயான பணப் பங்கீட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கூட்டமைப்புக்குள் உள்ளிருந்தே மெல்ல மெல்ல வெளிவருகின்றன. கூட்டமைப்பிலுள்ள பலர் தமிழ் மக்கள் யாருக்கும் வாக்களிக்கக் கூடாது என்று பகிரங்கமாகவே கூறிவருகிறார்கள்.

இதைக் குறிப்பிட்டுக் கேட்டு, பணத்தையும் வீட்டையும் பெற்றுக்கொண்ட கூட்டமைப்புத் தலைவர்களை அழைத்து எதிரணித் தலைவர்கள் கோபத்தை வெளிப்படுத்துவதாகவும் செய்திகள் வருகின்றன.

தமிழ் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையை இந்தத் தலைவர்கள் எப்படிப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை இந்தத் தேர்தலின் பிறகாவது தமிழ் மக்கள் உணர்ந்துகொள்வார்களாயின், அதுவே அவர்களுக்கு உண்மையான மாற்றம் ஒன்று நிகழ்வதற்கு வழிவகுக்கும்.

- ஆசிரியர்

# பாதுகாப்பான இடத்தில் கே.பி.

# ஜெனிவா கேள்விக்கும் பதிலளிப்பார்

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன், பாதுகாப்பான இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தேவைப்படுகின்ற நேரத்தில், சரியான வழியில் அவரை பயன்படுத்துவோம். குறிப்பாக ஜெனிவாவில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதில் கூறுவதற்கு அவர் தயாராக இருக்கின்றார் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் ஆயுத விநியோகஸ்தராகவும் சர்வதேச செயற்பாட்டாளராகவும் செயற்பட்ட குமரன் பத்மநாதனை (கே.பி) சரியான நேரத்தில், சரியான வழியில் பயன்படுத்துவோம் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், கே.பி. பற்றி போலியான விடயங்களை எதிர்க்கட்சியினர் கீழ்த்தரமாக பரப்பி வருகின்றனர். டாக்டர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு, அரவணைத்து வாழ்த்துத் தெரிவித்த புகைப்படத்தினை தவறான முறையில் பயன்படுத்தி, கே.பி.யுடன் ஜனாதிபதி கட்டித்தழுவுவது போன்ற போலியான புகைப்படத்தினை எதிர்க்கட்சியினர் வெளியிட்டு குழப்பம் விளைவிக்கின்றனர். இது அவர்களின் இயலாமையை எடுத்துக் காட்டுகிறது.

குமரன் பத்மநாதன் பாதுகாப்பான இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தேவைப்படுகின்ற நேரத்தில், சரியான வழியில் அவரைப் பயன்படுத்துவோம். குறிப்பாக ஜெனிவாவில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதில் கூறுவதற்கு அவர் தயாராக இருக்கின்றார்.

அதுமட்டுமல்லாமல் சர்வதேசத்தில் சூழ்ச்சிகளுக்கும் போலிகளுக்கும் நிச்சயமாக கே.பி பதில் கூறுவார் எனவும் சுசில் பிரேம ஜயந்த மேலும் தெரிவித்தார்.

## தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களின் கொடுப்பனவு ஜனவரி முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு நாடளாவிய ரீதியில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் பயிலுனர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு இம்மாதம் முதல் 4,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் அநுர திசாநாயக்கா அறிவித்துள்ளார்.

பயிலுனர்களுக்கான கொடுப்பனவு தற்போது மாதாந்தம் 2500 ரூபாவாக வழங்கப்பட்டு வருகிறது. இக்கொடுப்பனவு தற்போது 1500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 4000 ரூபாவாக இம்மாதம் முதல் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவ்வாண்டு முதல் தேசியக் கல்வியியற் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படுவோரின் பயிற்சிக்காலம் நான்கு ஆண்டுகளாக அதிகரிக்கப்படுவதுடன் டிப்ளோமா பட்டத்திற்குப் பதிலாக கல்விமாணி பட்டதாரிப்பட்டம் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# எமக்குள்ள அரசியல் உரிமைகளை சரியாக பயன்படுத்த வேண்டும்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் எட்டாம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஏற்கனவே தபால்மூல வாக்களிப்புச் செய்தவர்களை விட அனைத்து தமிழ்பேசும் அதிபர்களும், ஆசிரியர்களும் சுயமாகச் சிந்தித்து வாக்களிப்பதோடு உங்களைச் சார்ந்தவர்களையும் வாக்களிக்கச் செய்யுங்கள். இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மற்றவர்களின் அபிலாஷைகளுக்கு இடமளிக்காமல் நமக்குள்ள அரசியல் உரிமைகளை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட வழுக்கள் எமக்கு நல்ல பாடங்களைத் தந்துள்ளன. இனிவரும் காலங்களில் நாம் நிதானத்துடன் சிந்தித்து நடந்துகொள்வது மிகவும் அவசியமானதாகும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிபர்கள், ஆசிரியர்கள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தமது கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும். எந்தவிதமான முறைகேடுகளுக்கும் இடமளிக்கக்கூடாது. மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக உள்ள நாம் இந்நாட்டின் எதிர்கால சந்ததிக்கு முன்னுதாரணமாக நடந்துகாட்ட வேண்டும்.

அதிபர்களையும் ஆசிரியர்களையும் குறை சொல்லுகின்றவர்களுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. நடைபெற்ற தபால்மூல வாக்களிப்பில் அதிபர்கள், ஆசிரியர்களே தவறுகளை விட்டுள்ளார்கள் என்ற செய்தியை நாம் பொய்யாக்க வேண்டும். இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை கடலில் காணாமற்போன கொட்டடி மீனவர்கள் மாதகலில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை கடலில் கடந்த 2 ஆம் திகதி காணாமற்போன கொட்டடிப்பகுதியைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாதகல் கடற்கரைக்கு திரும்பியதாக பருத்தித்துறை நகர கடற்றொழிலாளர் சங்கம் தெரிவித்தது.

இரண்டு மீனவர்களும் கரை திரும்பாததை அடுத்து, அவர்களைத் தேடும் பணி கடந்த 3 ஆம் திகதியிலிருந்து முன்னெடுக்கப்பட்டது. அது பயனற்றுப் போனதை அடுத்து, காணாமற்போன இரண்டு மீனவர்கள் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் மீனவர்களின் உறவினர்கள் முறைப்பாடு செய்தனர்.

தொடர்ந்தும், காணாமற் போன மீனவர்களை தேடுவதற்காக நேற்றுமுன்தினம் காலை 5 படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.

காணாமற்போன இரண்டு மீனவர்களும் பயணித்த படகின் எரிபொருள் தீர்ந்த நிலையில் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தனர். இந்த நிலையில், மாதகல் கடற்றொழில் சங்கத்து மீனவர்களால் மேற்படி இரண்டு மீனவர்களும் காப்பாற்றப்பட்டு, மாதகல் கரைக்கு அழைத்து வரப்பட்டனர்.

காணாமற் போன இரண்டு மீனவர்களையும் தாங்கள் காப்பாற்றியுள்ளதாக மாதகல் கடற்றொழிலாளர் சங்கம், பருத்தித்துறை நகர கடற்றொழிலாளர் சங்கத்துக்கு தெரியப்படுத்தி, இரண்டு மீனவர்களையும் ஒப்படைத்துள்ளனர்.

இதற்கிடையில், காணாமற்போன. மீனவர்களை தேடச் சென்ற 5 படகுகளுடனான மீனவர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்கு கரை திரும்பியதாக பருத்தித்துறை மீனவர் சங்கத்தினர் தெரிவித்ததுடன், இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கும் தெரியப்படுத்தியுள்ளதாக கூறினர்.



# ஜனாதிபதி தேர்தலில் மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும்?

தற்போது பதவியில் உள்ள மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தை முற்றுமுழுதான ஒரு முற்போக்கான அரசாங்கம் என்று சொல்லிவிட முடியாது என்பது உண்மையே. ஆனால் இன்று தம்மை எதிரணி என்று கூறிக்கொள்ளும் ஐ.தே.க தலைமையிலான அணியினருடன் ஒப்பிடுகையில் இன்றைய அரசு பலமடங்கு முற்போக்கானது என்பதிலும் சந்தேகமில்லை.

**வி. சின்னத்தம்பி**

**சிறிலங்கா** சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தை எப்படியும் ஆட்சியிலிருந்து அகற்றி விட வேண்டும் என்ற அவாவில் பல்வேறு சக்திகள் ஒன்றிணைந் திருக்கின்றன. அவைகளாவன:

தமது பூகோள ரீதியிலான ஆதிக்கத்துக்கு மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் தொடர்ந்து முட்டுக்கட்டையாக இருப்பதால் அதை எப்படியும் அகற்றிவிட வேண்டும் என முனைந்து நிற்கும் சர்வதேச வல்லாதிக்க சக்திகள்.

நீண்ட காலமாக ஆட்சி அதிகார சுவையை அனுபவிக்க முடியாமல் ஏங்கித் தவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முந்தைய அதிகாரத்தை இழந்துவிட்ட அல்லது புதிதாக அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்து தோல்வியுற்ற சக்திகள்.

"புலம் பெயர் தமிழர்கள்" என்ற போர்வையில் செயற்படுகின்ற புலிகளின் ஆதரவாளர்கள்.

இலங்கையில் இருந்து செயற் படுகின்ற தமிழ் - முஸ்லீம் இனவாத சக்திகள்.

இவை தவிர ஒரு சிறு எண் ணிக்கையிலான "இடதுசாரி' சந்தர்ப்பவாதிகளும், பதவி வேட்டைக்காரர்களும்.

இந்த சக்திகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பொது எதிரணி என்ற பெயரில், ஆனால் இலங்கையின் படுபிற்போக்கான, ஏகாதிபத்திய சார்பான, இனவெறி கொண்ட ஐ.தே. கவின் தலைமையில் ஒன்றுபட்டுள்ளன.

2010 ஜனாதிபதி தேர்தலில் புலி களுக்கு எதிரான போரில் வெற்றியின் பங்காளி எனக் கருதப்பட்ட முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன் சேகாவை மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக ஜனாதிபதி தேர்தலில் போட்டிக்கு நிறுத்திப் பார்த்தார்கள். அவர் அதற்கு முந்திய தேர்தலில் ரணில் எடுத்த வாக்குகளுக்கு அண்மித்ததாக கூட வாக்குகளைப் பெறவில்லை.

எனவேதான் இம்முறை ஆளும் சிறீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறி சேனவை உடைத்தெடுத்து அவரை ஒரு "யூதாஸ்" ஆக மாற்றி களமிறக்கி யுள்ளனர். அத்துடன் தனது குடும்ப வாரிசை மீண்டும் அரசியலுக்கு கொண்டுவர துடிக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவையும் இணைத்துக் கொண்டுள்ளனர்.

இவைதவிர ஆளும் கட்சியிலிருந்து எதிரணிக்கு தாவிய முஸ்லீம் காங் கிரஸ் உட்பட தனிப்பட்ட நபர்கள் அனைவருமே முன்னர் ஐ.தே. கவிலிருந்து பதவிக்காக ஆளும் கட்சிக்கு தாவியவர்கள்தான். தமிழ் தேசிய கூட்டமைப்பும் பாரம்பரியமாக ஐ.தே.கவின் அரசியல் சகபாடிதான்.

அதுமாத்திரமின்றி, தற்போதைய அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை செய்யவிடாமல் தடுத்துக் கொண்டிருந்த ஜாதிக ஹெல உறுமய இப்பொழுது மைத்திரிபாலவின் கடிவாளத்தை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அக்கட்சியின் செயலாளர் சம்பிக்க ரணவக்க அண்மையில் தாம் ஆட்சிக்கு வந்தால் மாகாணசபைகளுக்கு எவ்வித அதிகாரங்களும் வழங்கப்பட மாட்டாது எனவும், மகிந்த ராஜபக்ச தவறவிட்ட எஞ்சிய புலிகளையும் தேடிப்பிடித்து அழிப்போம் எனவும் பகிரங்கமாக பிர- கடனம் செய்துள்ளார்.

அத்துடன் இன்னொரு சிங்களப் பேரின வாதியாகிய சரத் பொன்சேகவும், இடது சாரி போர்வையில் இருந்து கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வுகளை தொடர்ச்சியாக எதிர்த்து வரும் ஜே.வி. பி என்பனவும் கூட மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கும் கூடாரத்துக் குள் இணைந்து கொண்டுள்ளனர்.

---

**"பாசாங்குத்தனம் நிறைந்த கொழும்பு' உயரடுக்கினர் மகிந்த ராஜபக்ஸவை ஒரு துன்பியல் நாடகத்தின் வில்லனாக கருதி நிந்தனை செய்கிறாங்கள் என்றே நான் கருதுகிறேன்"**

# ரணில், சந்திரிகாவை விட மகிந்த நிச்சயம் மேலானவர்

**ராமன்** மற்றும் ராவணனுக்கு இடையே நடந்த யுத்தத்தில் துயரமான கதாநாயகன் மற்றும் வில்லனது தொடர்ச்சியான ஆதர வாளனாகிய நான் ஒரு இலங்கையன் என்ற வகையில் ராவணனுக்கு ஆதரவளித்து அவ ரையே பாதுகாப்பேன். நான் ராவணனின் பக்கமே இருப்பேன் ஒரு போதும் விபீ ணனக மாறமாட்டேன். அதனால்தான் நான் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்தேன் மற்றும் அதனால்தான் நான் மகிந்தவுக்கு ஆதரவு அளிக்கிறேன்.

எந்த நேரத்திலும் மகிந்தவுக்கு பின்னான ஒரு ஆட்சியையோ அதை ரணில் மற்றும் சந்திரிகா போன்ற பிரமுகர்களின் மேலாதிக்கத்தில் விடு வவதைப் பற்றி சாதகமாகவோ அல்லது பாவம் பார்த்தோ நான் நினைத்துப் பார்த்ததில்லை. அத் தகைய ஒரு வாய்ப்பு பிற்போக்கான ஆபத் துள்ள ஒரு வாய்ப் பாகவே நான் கருது கிறேன்.

"சிறிசேனவுக்கான வாக்கு ரணிலுக்கான வாக்கு" என்கிற தலைப்பில் டெய்லி மிரர் பத்திரிகையில் வெளியான தமரா குணநாயகத்தின் கட்டுரையின் துல்லியமான வாசிப்பை நானும் ஏற்றுக்கொள்கிறேன்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தலை நான் முற்றாக எதிர்ப்ப துடன், அதை தக்க வைப்பதற்காக திருத்தப்பட்ட வடிவத்தையும் (17வது திருத்தத்தை மறுசீரமைப்பு செய்ததையும்) நான் முற்றாக எதிர்க்கிறேன். ஜெயவர்தனா ஆட்சிக்கு ஆயதம் ஏந்திய தீவிர இடதுசாரி கள் எதிர்ப்பு காட்டிய வருடங்களில், அதன்போது பயங்கரவாத தடை சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் என்பனவற்றின் கீழ் நானும் தண்டிக்கப் பட்டிருந்தேன் ஆனாலும் அப்போது கூட நிறைவேற்று ஜனாதிபதி முறை எங்களது அரசியல் மற்றும் கருத்தியல் தாக்கத்துக்கு இலக்கானதில்லை.

அநேகமாக லத்தீன் அமெரிக்கா மற்றும் வேறு இடங்களிலுள்ள அனைத்து இடது மற்றும் முற் போக்கான நிருவாகத்தவர்கள் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஆதரிப்பவர்களாகவும் மற்றும் தற்போது பதவி வகிப்பவர்களாகவும் உள்ளார்கள். நிறைவேற்று ஜனாதிபதி முறை என்பது தாராண்மைவாதம் - முதலாளித்துவ வாதம் ஆகிய இரண்டுவித சிந்தனைகள் மற்றும் தீவிரவாதம் என்பனவற்றின் முற்போக்கான அரசியல் சிந்தனைகளின் புரட்சியினால் உருவாக்கப்பட்ட விளைவு, அல்லது உப விளைவு ஆகும். எனவே புரட்சிகரமான அரசி யல் பாரம்பரியம் கொண்ட அந்த சமூகங்களின் சாட்சியாக, அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா, சீனா என்பன உள்ளன.

நீண்ட நாட்களாக அவதானித்து மற்றும் கொடுக்கப்பட்ட எனது கருத்துக்களின்படி, குறைவான தீமைகள் உள்ளதான மகிந்த ராஜபக்ஸ பக்கத்தை ஆதரிப்பதற்கு என்னிடம் இரண்டு பெரிய காரணங்கள் உள்ளன: - (1) நிறைவேற்று ஜனாதிபதி முறை மற்றும் (2) ரணில், சந்திரிகா குழு.

கோட்டாபயவைப் பொறுத்தவரை என்னுடைய கொள்கை விமர்சனங்கள் அப்படியே இருந்தாலும்கூட, ஆகக் குறைந்தது பிரிவினைவாத பாசிசவாதி களான மேற்கத்தைய சார்பு சமாதானக் குழுவினரான ரணில் மற்றும் சந்திரிகா போல இல்லாமல் சந்தேகமின்றி அவர் ஒரு நாட்டுப் பற்றாளர் ஆவார்.

மைத்திரி நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து, ஏப்ரல் 20ம் திகதி யளவில் பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையிடம் அதிகாரத்தைக் கையளித்ததின் பின்னர் ரணில் மற்றும் சந்திரிகா ஆகியோரின் கைகள் ஓங்கியிருக்கும்.

முக்கிய தீர்மானங்களை மேற் கொள்ளும், அமெரிக்க குடியரசு கட்சி மற்றும் பிரித்தானிய கன்சர்வேட்டிவ் கட்சி என்பனவற்றின் தலைமையின் கீழுள்ள உலகளாவிய வலது, மற்றும் சர்வதேச ஜனநாயக அமைப்பு என்பனவற்றின் உத்தியோகபூர்வ பிரதிநிதியாக ரணில் விக்கிரமசிங்க உள்ளபோது எனது தீர்மானத்தை ஆச்சரியப்பட்டு எதிர்க்க யாரால் முடியும், அதேவேளை மகிந்த ராஜபக்ஸ தேசிய இறையாண்மையை வலியுறுத்துவதில் தீவிர ஆதரவாளராக உள்ளார்.

ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கு அதைப்பற்றியதும் மற்றும் அதேநேரத்தில் தனிப்பட்ட, சித்தாந்த மற்றும் கருத்தியல் மீதான குறிப்பும் தேவை, பிரேமதாஸவை கரு- தியது போலவே மகிந்தவையும் பாசாங்குகாரர்களான கொழும்பின் மேல்தட்டு வர்க்கத்தினரால் நிந்திக்கப்படும் ஒரு துயரமான கதாந- ாயகனாகவே நான் கருதுகிறேன்.

**- கலாநிதி தயான் ஜயதிலக**

---

# தமிழர்களை செல்லாக்காசாக்கிய த.தே.கூ.!

**இலங்கையில்** நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மகிந்த ராஜபக்'வுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் கடுமையான போட்டி நிலையை உருவாக்கியிருக்கும் நிலையில் தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களும் முஸ்லிம்களும் மலையக மக்களும் அடங்கிய சிறுபான்மைச் சமூகத்தினர் தாங்கள் ஒன்று திரண்டிருந்தால் தமது பாதுகாப்பு, இருப்பு. அடையாளம், சுதந்திரம் மற்றும் முன்னேற்றம் போன்ற விடயங்களில் நிபந்தனைகளை முன்வைத்திருக்க முடியும். இதற்கான வாய்ப்பு 100 வீதமும் இருந்தது.

இதை முன்னின்று செய்திருக்க வேண்டியது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே. தமிழ் பேசும் தரப்பில் அதுவே பெரிய கட்சியாகவும் மூத்த தலைவர்களைக் கொண்ட சக்தியாகவும் இருக்கிறது.


ஆனால், அது அதைச் செய்யவில்லை. பதிலாக எத்தகைய நிபந்தனைகளும் இல்லாமல் உதிரியாக - செல்லாக் காசு என்ற நிலையில் சம்பந்தன் மைத்திரியை ஆதரிக்கும் முடிவை எடுத்திருக்கிறார். இதே மாதிரியாக எந்த வாக்குறுதிகளையும் பெற்றுக்கொள்ளாமல் மகிந்தவை ஆதரிக்கும் முடிவை சம்பந்தன் எடுத்திருந்தாலும் அதுவும் தப்பே.

தமிழர்களை மட்டுமல்ல பிற சிறுபான்மைச் சமூகங்களையும் செல்லாக்காசாக்கி விட்டார் சம்பந்தன்.

**- கருணாகரன்**

# தேர்தலின் பின் நாட்டைவிட்டு தப்பிச் செல்ல மாட்டேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு



எதிர்வரும் 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தாம் நாட்டைவிட்டு வெளியேறிச் செல்லப் போவதில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததன் பின்னர் விமான நிலையங்கள் மூடப்பட்டு தம்மை நாட்டை விட்டு தப்பிச் செல்ல விடாது எதிர்க்கட்சியினர் தடுப்பர் என்ற கூற்றை நிராகரிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளிடமிருந்து தப்பிச் செல்லாத் தாம் வெளிநாடடுக்கு தப்பிச் செல்லப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியினர் தேர்தலில் வெற்றியீட்ட முடியும் என கனவு காண்பதாகவும், தேர்தல் வெற்றியின் பின்னர் எதிர்க்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை குப்பைத் தொட்டியில் தாம் எறிந்து விடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தம்மிடம் மரியாதையாக பிரியாவிடை பெற்றுச் சென்றதாகவும், மைத்திரிபால சிறிசேன அவ்வாறு செய்யவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 54.73 சதவீத வாக்குகளால் வெற்றிபெறுவார் ஜனாதிபதி

## சத்லங்கா கருத்துக் கணிப்பில் தகவல்

சத்லங்கா அமைப்பினால் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான மக்கள் கருத்துக்கணிப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 54.73 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 22 தேர்தல் மாவட்டங்களில் 41ஆயிரத்து 629பேரிடம் நடத்தப்பட்ட தொலைபேசி கலந்துரையாடல் மூலம் இந்தக் கருத்துக்கணிப்பு நடாத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 54.73 சதவீத வாக்குகளையும் எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன 40.02 வீத வாக்குகளையும் பெறுவார் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் 5.25சதவீதத்தினர் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.


இந்தக்கருத்துக்கணிப்பானது நவம்பர் மாதம் 9ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 2ஆம் திகதி வரை காலை 8.30 மணியில் இருந்து மாலை 6.00 மணி வரை பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே இந்த புள்ளிவிபரம் வெளியிடப்படுவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பூகோள விஞ்ஞான ஆய்வுப்பிரிவு பேராசிரியர் ஆர்.எம்.கே. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சத்லங்கா திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையின் உத்தியோக பூர்வ வெளியீடு நேற்றுமுன்தினம் கொழும்பு, கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# நாடாளுமன்றம் கலைக்கப்படாது

# மக்கள் குழப்பமடையத்தேவையில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்படுமென எதிர்க்கட்சிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் பொய்ப பிரசாரங்களையிட்டு மக்கள் குழப்பமடையக் கூடாதென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதித் தேர்தல நடைபெறும் முன்னர் நாடாளுமன்றம் கலைக்கிப்படுமென எதிர்க்கட்சியினர் கூறிவருகின்றனர். இது வெறுமனே எதிர்க்கட்சிகளினால் முன்வைக்கப்படும் தர்க்கமாகும். அதில் எந்த உண்மையும் இல்லை. அவ்வாறு நாடாளுமன்றத்தை உடனடியாக கலைககும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்பதனைத் தெளிவாக கூறுகின்றோம். எதிர்க்கட்சிகள் வெறுமனே இவ்வாறான பிரசாரங்களை முன்வைத்துவருகின்றன.

ஜனாதிபதியின் வெற்றியின் பின்னர் நாட்டில் ஒரு வருட காலத்தில் புதிய அரசியலமைப்பை கொண்டுவரவுள்ளோம். அதற்காக முழுநாடாளுமன்றமும் சட்டவாக்க சபையாக மாற்றப்பட்டு புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும். இவ்வாறான முயற்சி ஒன்றை நாங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம். ஜனாதிபதியின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் இன்று பல அரசியல் கட்சிகள் எம்முடன் இணைந்து கொண்டுள்ளன.

ஆனால் மைத்திரிபால தான் வெற்றிபெற்றதும் நிறைவேற்றுப் பிரதமராக ரணில் விக்ரமசிங்கவை நியமிப்பேன் என்று கூறிவருகின்றார். எதிரணியினர் இன்று மாற்றம் குறித்துப்பேசி வருகின்றனர். மாற்றம் என்பது நாட்டுக்குத் தேவையாகும். ஆனால் அந்த மாற்றமானது ஆரோக்கியமாக அமையவேண்டும். நாட்டை பின்னடைவுக்கு கொண்டு செல்வதாக அமையக் கூடாது.

மேலும் ஜனாதிபதியின் வெற்றியின் பின்னர் நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நாங்கள் தீர்வு காண நடவடிக்கை எடுப்போம். அதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# மறுப்பு



தாம் சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக வெளியான செய்தியை ஜனாதிபதியின் சோதிடரான சுமணதாஸ அபேகுணவர்த்தன மறுத்துள்ளார்

தாம் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் வீட்டிலேயே நலமுடன் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஊடகங்களே பிழையான செய்திகளை பரப்பியுள்ளன.

ஊடகங்கள் மீது தாம் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும சுமணதாஸ கூறியுள்ளார்.

# வெளிநாட்டு சக்திகளுக்கு அசையாத மகிந்தவை வெற்றி பெறச் செய்வோம்

## சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி அழைப்பு



வெளிநாட்டுச் சக்திகளினால் ஆட்டுவிக்க முடியாத ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டச் செய்வோம் என சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். சில நாடுகள் தங்களுக்கு தேவையான வகையில் இலங்கையை ஆட்டுவிக்க சிலரை ஜனாதிபதியாக்க முயற்சிக்கின்றன.

அண்மைக்காலமாக கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. கிராம மக்கள் நன்றி மறந்து ஒரு போதும் செயற்படமாட்டார்கள்.

எதிர்வரும் 8ஆம் திகதி நாட்டு மக்கள் மதிநுட்பமான தீர்மானம் எடுப்பார்கள் என்பதில் எனக்கு எவ்வித் சந்தேகமும் கிடையாது.

எல்லோரிடமும் குறைகள் உண்டு, குறைகள் இல்லாத மனிதர்கள் கிடையாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பழையவர்களுக்கு இடமில்லை என குற்றம் சுமத்தப்படுகின்றது. பல்வேறு அநீதிகள் இழைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் கட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சித் திட்டங்கள் வெற்றி கொள்ளப்பட்டுள்ளன.

சந்திரிக்கா, மைத்திரிபால சிறிசேன மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பற்றி நான் பேச விரும்பவில்லை.

அவ்வாறு பேசுவதன் மூலம் அவர்களுக்கு தேவையற்ற பிரப்ல்யம் கிடைக்கப்பெறும் என ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

# பொது வேட்பாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக



எதிரணி பொது வேட்பாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுப்பதாக அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை சங்கடப்படுத்தும் நோக்கில் பல்வேறு பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாகவும் டளஸ் அழகப்பெரும் இதன் போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அரசாங்கம் எந்தத் தேர்தல் வன்முறை செயல்களையும் அனுமதிக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தபால் மூலவாக்களிப்பு குறித்து பொய்ப்பிரசாரமென கவலை

தபால் மூல வாக்களிப்பு தொடர்பில் பொய்ப் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால மூல வாக்களிப்பின் போது அரசாங்க ஊழியர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதனை கண்டு பிடிக்க முடியாது.

தபால் மூல வாக்களிப்பின் போது ஓர் குறிப்பிட்ட வேட்பாளர் வெற்றியீட்டியுள்ளதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை.

யாருக்கு வாக்களத்தீர்கள் என தபால் மூல வாககாளர்களிடம் கேட்கும் உரிமை யாருக்கும் கிடையாது. தாம் யாருக்கு வாக்களித்தோம் என்பது பற்றி வாக்காளர்களும் குறிப்பிடக்கூடாது.

வாக்களிப்பு நிலையங்களில் அளிக்கப்படும் வாக்குகள் யாருக்கு அளிக்கப்பட்டன என்பதனை கண்டுபிடிக்க முடியாது, இதனால் அச்சமின்றி வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

# பணயக்கைதிகளாக 77 இந்தியப் பிரஜைகள்

இலங்கையில் உள்ள இந்திய நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் 77 இந்தியர்களையும் உடனடியாக இந்தியாவுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு இந்திய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் செயற்படும் இந்திய நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் 77 இந்தியர்களும் கைதிகளைப் போல நடாத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பீஹாரை சேர்ந்தவர்களே இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர்.

இதனையடுத்து இந்திய வெளியுறவு அமைச்சர் சுஸ்மா சுவராஜ், குறித்த இந்திய பணியாளர்களை இந்தியாவுக்கு திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு இந்திய உயர்ஸ்தானிகருக்கு பணித்துள்ளார்.

# ஆழியவளை கல்வி நிலையத்துக்கு அப்பியாசக் கொப்பிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆழியவளை கல்வி நிலையத்துக்கு ஒரு தொகுதி அப்பியாசக்கொப்பிகளை கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக் கட்டளை நிதியத்தினால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.

இக் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் வறிய மாணவர் களின் கல்வி விருத்திக்காகவே இந்த கொப்பிகள் வழங்கப் பட்டன.

ஆழியவளை பிரதேசத்தின் மாணவர்களுடைய கல்வி விருத் திக்காக உதவிகள் வழங்கிய கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிதியத்திற்கு ஆழியவளை கல்வி நிலையத்தின் நிர்வாகம் சார்பாகவும் மாணவர்கள் சார்பாகவும் மாணவர்கள் நன்றியினை தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன் வடமராட்சி கிழக்கு பல்கலைக் கழக மாணவர் களின் விருத்திக்காகவும் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிதியம் தொடர்ந்தும் உதவி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (90)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மேற்கு கிராம முதியோர் சங்கத்தின் ஏற்பாட் டில் - 2014 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற அளவெட்டி மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த முதல் 10 மாணவர் களைப் பாராட்டிக் கௌர விக்கும் நிகழ்வு அண்மையில் அளவெட்டி மேற்கு கிராம முதி யோர் சங்கத் தலைவர் தம்பு அருளானந்தம் தலைமையில் அளவெட்டி மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் நடை பெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வடக்கு பிரதேச செயலக சமூகசேவை கள் அலுவலர் வ.கதிரமலை மற்றும் சிறப்பு விருந்தினர்க ளாக அளவெட்டி மேற்கு கிராம அலுவலர் க.பூபாலசிங்கம் வாழ்வெழுச்சித்திட்ட உத்தயோ கத்தர் பொருளாதார அபிவி ருத்தி அலுவலர் இ.பிரகாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கௌரவிப்பு நிகழ் வாக முதியோர்களுக்கிடையிலான வினாடிவினாப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் இரண்டா மிடம் பெற்ற அளவெட்டி மேற்கு கிராம முதியோர் சங்க அங்கத் தவர்கள் சா.தணிகாசலபதி, க.இராசகோபால் ஆகியோருக் கான கௌரவிப்பும் இடம் பெற் றது.

நிகழ்விற்கான பிரதன அனு சரணையினை சமூகசேவையா ளர் திருமதி.ச.சாரதாதேவி வழங்கி உதவியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (63)

# மைத்திரியை அங்கீகரித்தால் தமிழர்களின் விதி மாறிவிடும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு





பொது எதிரணியின் ஜனாதி பதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனா கோரும் மாற்றத்தை மக்கள் அங்கீகரித்தால் அது தமிழ் மக்களின் தலைவிதியை தலைகீழாய் மாற்றிவிடும். எனவே மாற்றம் என்பது பாதிக்கப்பட்டு மீண்டுகொண்டிருக்கின்ற மக்க ளின் வாழ்வில் ஏற்பட வேண் டும் அதற்கு மகிந்த ராஜபக்ஸ மறுபடியும் வெற்றிபெற வேண டும் என நாடாளுமன்ற உறுப் பினரும், நாடாளுமன்றக்குழுக் களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரி வித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பாரதிபுரம் பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி மகிந்த ராஜபக் சவை ஆதரித்து நடத்திய தேர் தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

மைத்திரியின் மாற்றத்திற்கு ஆதரவளிக்குமாறு கோரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தீர்மானத்திற்கு கட்சிக்குள்ளேயே கடுமையான கருத்து மோதல் கள் நடக்கின்றன.சில கட்சியின் முக்கியஸ்தர்கள் முன்வந்து பத் திரிகையாளர்களை அழைத்து எதிர்ப்பை வெளியிட்டு வருகின் றனர். கட்சியின் தலைமையின் முடிவை கட்சியின் ஏனைய வர்கள் பகிரங்கமாகவே எதிர்க் கின்றனர். எனவே இந்த நிலை யில் தமிழ் மக்கள் தெளிவாக சிந்திக்க வேண்டும் எந்தக் கொள் கையும் இல்லாத மைத்திரியை ஆதரவளிக்குமாறு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எடுத்த முடிவு தமிழ் மக்களின் நலனை அடைவு வைத்து கூட்டமைப்பைச் சேர்ந்த சிலரின் நலன்களை உயர்த் திக்கொள்வதே தவிர வேறு ஒன்றுமில்லை. பெருமளவு பணத் திற்காக தமிழ் மக்களின் வாக் குரிமைகள் தமிழ்த்தேசியக் கூட் டமைப்பினரால் விற்கப்பட்டுள் ளது. இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தல் தமிழ் மக்களின் எதிர் காலத்தை தீர்மானிக்கின்ற ஒரு பரீட்சைக் களம்தான். எனவே, அந்த தேர்தலில் மக்கள் எடுக் கப்போகும் தீர்மானங்கள் தொடர பாக மக்கள் தெளிவைப் பெற் றிருப்பது மிகவும் அவசியமா னது. அதிலும், பல தடவைகள் இனக்கலவரங்களால் பாதிக்கப் பட்டு வறுமைக்கோட்டுக்குள் வாழும் மக்கள் தங்களின் எதிர் காலம் தொடர்பாக ஏக்கத்தோடு வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். இத்தேர்தலில் மிகச் சரியான முடிவை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இராணுவத்தால் கட்டப்பட்ட வீடுகளை மக்களிடம் கையளித்தார் நாமல்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்திற்கு வருகைதந் துள்ள நாமல் ராஜபக்ஷ பண்டத் தரிப்பு பல்லசுட்டி பகுதியில் இரா ணுவத்தால் கட்டப்பட்ட வீடு களை மக்களிடம் கையளித்துள் ளார்.

தேர்தல் பரப்புரைக்காக யாழ்ப் பாணம் வந்துள்ள நாமல் ராஜ பக்ச நேற்றுமுன்தினம் குறித்த வீடுகளை மக்களிடம் கையளித் துள்ளார்.

கடந்த முறை யாழ்ப்பாணத் திற்கு வருகைதந்தபோது யுத்தத் தினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களில் பண்டத்தரிப்பு பல்லசுட்டி பகுதியில் வசித்து வரும் 20 பேருக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன்படி இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீடுகளையே நாமல் ராஜபக்ஷ உரிமையாளர்களிடம் வழங்கிவைத்தார்.

# வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் ஏழாலையில் கோழிக்குஞ்சுகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு ஸ்ரீவிநாயகர் ஐக்கிய நாடுகள் சங்கம் அப்பகுதியில் வறுமைக்குட்பட்ட பெண்களைத் தலைமைத் துவமாகக் கொண்ட குடும்பங்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகளைத் தெரிவு செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் 38 குடும்பங்களுக்குத் தலா 20 கோழிக் குஞ்சுகள் வீதம் வழங்கியுள்ளது.

இதற்கான நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி சங்க மண்டபத்தில் தலைவர் கந்தையா மகாதேவன் தலைமையில் இடம்பெற்ற போது முதன்மை விருந்தினராக வடமாகாண விவசாய, கால் நடை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் வடமாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன், கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் சி.வசீகரன், உடுவில் கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் சி.விமலகுமார், வலிகாமம் தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் நா.இலட்சுமிகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளி களுக்கு கோழிக்குஞ்சுகளை வழங்கி வைத்தனர். (48)

# முரசின் இன்றைய பலன்

(06.01.2015 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் மார்கழி மாதம் 22 ஆம் திகதி.

பிரதமை/சித்தம்.

புனர் பூச நட்சத்திரம் மு.ப.11.50 வரை.

இராகு காலை 03.31 - 05.01 வரை. சுபநேரம் 11.01 - 12.31 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
அஷ்டமத்துச்சனி 8 இல் இருப் பதினால் அவசரப்பட்டு நடக்கத் தலைப்படுங்கள்.

**ரிஷபம்**
வியாழ கோசரம் 3 இல் நிற்பதி னால் சகோதர வழியில் மனத் தாங்கலும் துயரும் தக்க வைக்கும்.

**மிதுனம்**
வியாழகோசரம் 7 இல் இருப் பதினால் சுபகாரியங்கள் நிறை வேற பண உதவி கிடைத்தல்.

**கடகம்**
சனீஸ்வரன் 5 ஆம் நிலைக்கு வந்ததினால் சனியுடன் தொடர் பான நோய்களில் கூடிய கவனம் எடுக்கவும்.

**சிம்மம்**
அஷ்டமத்துச் சனி 4 இல் இருப் பதினால் சொத்துப் பிரச்சினை தீர்க்கப்படாது நீதிமன்றை நாட முஸ்தீபு.

**கன்னி**
எழரைச்சனி நீங்கியதால் கை விட்டிருந்த காரியங்களை மீண்டும் தொடங்கலாம்.

**துலாம்**
சட்ட ராகு 6 இலும் கேது 12 இலும இருப்பதினால் கொடுக்கல் வாங கலில் இழுபறி ஏற்பட்டுப்பின் சுமுக நிலையை அடைதல்.

**விருச்சிகம்**
பாக்கிய நிலை 9 இல் குரு இருப பதினால் பிதாவின் தேகநலம் பாதிக்கப்படலாம்.


**தனுசு**
அட்டமத்து வியாழனும் ஏழரைச் சனியும் இருப்பதினால் முற்றா கும் நிலைக்கு வந்த விவாகம் ஸ்தம்பித்து விடலாம்.

**மகரம்**
வியாழ கோசரம் (7) நன்கு இருப் பதினால் சுபசெய்திகள் வந் தடைந்து மகிழ்வினைத்தரும்.

**கும்பம்**
எதிரியைக் கண்டவிடத்து சச் சரவு செய்யாது விலகி விடுவ தால்துன்ப நிலை தொடராது விடல்.

**மீனம்**
கண்டக நிலையில் 7 இல் இராகு நிற்பதினால் தொழில் காரணமாக பிரிவு ஏற்படலாம்.

# மீண்டது நியூசிலாந்து



(வெலிங்டன்)

வில்லியம்ஸன், வைற்லிங் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி இனிங்ஸ் தோல்வியிலிருந்து மீண்டதுடன் முன்னிலை பெற்றுள்ளது.

நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் நியூசிலாந்தின் வெலிங்டனில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி 221 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய இலங்கை அணி முதல் ஐந்து விக்கெட்டுக்களையும் 78 ஓட்டங்களைப் பெற்றவேளை பறிகொடுத்ததுடன் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த சண்டிமல் சங்கக்காரவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆடினார். இந்தஜோடி அணியை நெருக்கடியிலிருந்து மீட்டதுடன் பலமான ஓட்ட எண்ணிக்கையையும் பெற்றுக் கொள்ள துணை புரிந்தது. ஒரு முனையில் சங்கக்கார சதம் விளாச மறுமுனையில் சண்டிமல் அரைச் சதம் கடந்தார். இந்நிலையில் இந்த ஜோடி 130 ஓட்டங்களைப் பெற்றவேளை (சண்டிமல்) பிரிக்கப்பட்டது. தொடர்ந்து அதிரடியாக ஆடிய சங்கக்கார அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்ததுடன் இரட்டைச் சதம் விளாசியும் அசத்தினார். இறுதியில் இலங்கை அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 356 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்கக்கார 206 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், 18 பவுண்டரிகள் அடங்கலாக 203 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் சங்கக்கார பெற்றுக் கொண்ட 38ஆவது சதமாகவும், 11ஆவது இரட்டைச் சதமாகவும் இது பதிவாகியது. மற்றும் சண்டிமல் 67, ஹேரத் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நீஹம், ப்றைட்வெல் ஆகியோர் தலா மூன்று. போல்ட் இரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

143 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி பிரதீப்பின் பந்து வீச்சிற்கு ஈடு கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு முனையில் வில்லியம்ஸன் பொறுமையாக ஆடியபோதிலும் மறுமுனையில் விக்கெட் சரிவை எவரும் நிறுத்தவில்லை. ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த வைற்லிங் வில்லியம்ஸனுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆடியதுடன் அணி நெருக்கடியிலிருந்து மீளவும் வழி செய்தார். இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை நியூசிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் வில்லியம்ஸன் 200 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 80, வைற்லிங் 140 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 48 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 94 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றுள்ளது. மற்றும் மக்கலம் 22, லதம் 35, ரூத்பேர்ட் 40 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் பிரதீப் நான்கு, ஹேரத் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளனர். ஐந்து விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் நியூசிலாந்து அணி 118 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# பிரட்மனின் சாதனையை சமன் செய்ய விரும்பும் சங்கா

37 வயதான சங்கக்கார உலக கோப்பை கிரிக்கெட் போட்டியுடன் அனைத்து வடிவிலான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வு பெறத் திட்டமிட்டிருந்தார். எனி னும் இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு அவரை கப்டன் மத்யூஸ் மற்றும் தேர்வாளர்கள் வலியுறுத்தினர். இதையடுத்து உலக கோப்பையுடன் ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் முடிவில் மாற்றமில்லை, டெஸ்டில் தொடர்வது குறித்து மறுபரிசீலனை செய்வதாக உறுதியளித்தார். இன்னும் ஒரு இரட்டைச்சதம் விளாசினால், 65 ஆண்டு கால பிரட்மனின் சாதனையை அவர் சமன் செய்து விடுவார். அதைச் செய்ய விரும்புவதாக நேற்று முன்தினம் நிருபர்களிடம் தெரிவித்த சங்கக்கார, உலக கோப்பை கிரிக்கெட் முடிந்த பின்னரே அடுத்து என்ன செய்வது என்பதை முடிவு செய்வேன். ஆனால் உலக கோப்பை முடிந்ததும் எதிர்காலம் குறித்த எனது சிந்தனை எப்படி அமையும் என்பதை இப்போதே கணிப்பது கடினம் என்று குறிப்பிட்டார்.


# உலகக் கிண்ணத்திற்கான பங்களாதேஷ் அணி அறிவிப்பு

உலகக்கிண்ணத்தில் விளையாடவுள்ள பங்காளதேஷ் கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழு இந்த அணியை தெரிவு செய்து அறிவித்துள்ளது.

சகலதுறை வீரரான சௌமியா சர்கார், புதிய வீரராக அணிக்குள் இணைக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த மாதம் சிம்பாப்வே அணியுடன் நடைபெற்ற ஐந்தாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் தனது அறிமுகத்தை மேற்கொண்டார். நசிர் ஹொாசைன், டஸ்கின் அஹமட் ஆகியோர் சிம்பாப்வே தொடரில் விளையாடாத வீரர்கள் இந்த அணியில் இணைக்கப்பட்டுள்ளனர். அணித் தலைவர் யார் என்பதை இன்னமும் அறிவிக்கவில்லை. மஸ்ரபி மோர்த்தாசா தலைவராகவும் சகிப் அல்-ஹசன் உப தலைவராகவும் அறிவிக்கப்படுவர் என நம்பப்படுகின்றது.

அணியைத் தெரிவு செய்யும் போது உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற நினைப்பிலேயே தெரிவு செய்வோம். ஆனாலும் நடைமுறை சாத்தியம் என்று ஒன்றுள்ளது. அதன்படி பங்களாதேஷ் அணியிலும் பார்க்க பலம் குறைந்த அணிகளான ஆப்கானிஸ்தான், ஸ்கொட்லாந்து அணிகளை வெற்றி பெறவேண்டும். அத்துடன் நியூசிலாந்து, இலங்கை, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து அணிகளில் ஏதாவது ஒன்றையாவது வெல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்பே உள்ளது. முடிந்தால் இரண்டாம் சுற்றுக்கு தெரிவாக வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே இந்த அணியைத் தெரிவு செய்துள்ளோம் என தெரிவுக்குழுவின் தலைவர் பரூக் அஹமட் தெரிவித்துள்ளார்.

அணி விபரம்: தமிம் இக்பால், அனாமல் ஹக், சௌமியா சர்கார், மொமியுனல் ஹக், சகிப் அல் ஹசன், முஸ்பிகீர் ரஹீம், மஹமதுல்லா, நசீர் ஹொசைன், சபீர் அஹமட், மஷ்ரபீ மோர்தாசா, தஸ்கின் அஹமட், அல் அமின் ஹொசைன், ரூபல் ஹொசைன், அரபாத் சன்னி, டைஜுல் இஸ்லாம்



# கால்பந்து வீரர் சுட்டுக்கொலை

(மொஸ்கோ)

ரஷ்யாவைச் சேர்ந்த கால்பந்து வீரர் கசான் மகோமெதோவ் (வயது-20). இவர் அன்ஷி மகா செக்கலா தேசிய கால் பந்து லீக் கிளப் அணியில் விளையாடி வந்தார்.

இந்த கிளப் வடக்கு காகசஸின் டாஜெஸ் பகுதியில் உள்ளது. இங்கு தீவிரவாதிகளுக்கும், ரஷ்ய இராணுவத்துக்கும் இடையே அடிக்கடி சண்டை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் மகோமெதோவ் நேற்று முன்தினம் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது யாரோ மர்ம நபர் இவர் மீது துப்பாக்கியால் சுட்டார். இதனால் படுகாயம் அடைந்த அவர் இரத்த வெள்ளத்தில் மயங்கி சரிந்தார். உடனே அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால் வழியிலேயே பரிதாபமாக இறந்தார். அவரை சுட்டுக் கொன்றது யார் என தெரியவில்லை. அதுகுறித்து விசாரணை நடக்கிறது.

ரஷ்யாவில் வருகிற 2018ஆம் ஆண்டில் உலக கோப்பை கால்பந்து போட்டி நடைபெறவுள்ளது. 11 நகரங்களில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் கால்பந்து வீரர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ரஷ்யாவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

விளையாட்டுச் செய்திகள்

# டோனிக்கு கிளார்க் பாராட்டு

(சிட்னி)

அவுஸ்ரேலிய அணி கப்டன் மைக்கல் கிளார்க் அளித்த பேட்டியில், இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் பதவியைவிட ஒரு கடினமான பணி வேறு எந்த விளையாட்டிலும் இருப்பது அரிது. மூன்று வடிவிலான கிரிக்கெட்டிலும் டோனி கப்டன் பதவியிலும், விக்கெட் கீப்பிங் பணியையும் திறம்பட கையாண்டார். தனக்குரிய பணியை அற்புதமாகச்செய்தார். டெஸ்ட் அணியில் இல்லாததால் அவரது இடத்தை வேறு எந்த வீரராலும் நிரப்புவது கடினம் எனத் தெரிவித்துள்ளார்.

# ஹோலியின் ஆக்ரோஷம்; ஏற்கிறார் சாஸ்திரி




(சிட்னி)

ஹோலியின் ஆக்ரோஷமான அணுகுமுறையில் எந்தத் தவறும் இல்லையென இந்திய கிரிக்கெட் அணியின் இயக்குநர் ரவிசாஸ்திரி தெரிவித்துள்ளார்.

களத்தில் வெறும் வார்த்தையால் மட்டும் சாதித்து விட்டு, 3 டெஸ்டையும் சேர்த்து வெறும் 5 ஓட்டங்கள் மட்டும் அவர் எடுத்திருந்தால், இது பற்றி அவரிடம் நான் பேசியிருப்பேன்.

ஆனால் அவர் இந்தத்தொடரில் 500 ஓட்டங்களுக்கு ஒரு ஓட்டம் மட்டுமே குறைவாக எடுத்துள்ளார். எதையும் சரியான முறையிலேயே செய்கிறார். அவர் ஆக்ரோஷமான ஒரு கிரிக்கெட் வீரர்.

களத்திலும் அது போல் செயற்படவே விரும்புகிறார். இது தான் அவரது சிறந்த ஆட்டத்தையும் வெளிக்கொண்டு வருகிறது.

அவரது அணுகுமுறையை விவியன் ரிச்சர்ட்ஸ் கூட பாராட்டியிருக்கிறார். அவுஸ்ரேலிய அணியும் அவரது விளையாட்டை பாராட்டுகிறது. ஹோலி இளம் தலைவர். படிப்படியாக கற்று, முதிர்ச்சியான தலைவராக உருவாக வேண்டும். அது தான் ஒட்டுமொத்த அணிக்கும் நல்லதாக அமையும்.

டோனி திடீரென டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து விலகுவதாக கூறியதை கேட்டு அனைவரும் அதிர்ச்சிக்குள்ளானோம். ஆனால் தீவிரமாக சிந்தித்த பிறகே அவர் இந்த முடிவுக்கு வந்தார்.

அவர் சாதனைகளையோ அல்லது எண்களையோ அல்லது பிரிவுபசார போட்டியையோ எதிர்பார்க்கவில்லை. இந்த விடயத்தில் அவர் மிகவும் நேர்மையுடன் நடந்து கொண்டார். தன்னலமற்ற அவரது செயலுக்கு நாம் மதிப்புக் கொடுக்க வேண்டும் என ரவிசாஸ்திரி மேலும் தெரிவித்துள்ளார்.

# ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்ச ரத பவனி



வரலாற்றுச்சிறப்பு மிக்க ஈழத்துக் சிதம்பரம் என்று போற்றப்படும் காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவிலில் பஞ்சரத பவனி நேற்று முன்தினம் பக்தி பூர்வமாக விசேட பூசை வழிபாடுகளுடன் இடம்பெற்றது. திருவெம்பாவை விசேட உற்சவ காலம் என்பதனால் பெரும் தொகையான பக்தர்கள் பஞ்சரத பவனி உற்சவத்தில் கலந்து கொண்டு வழிபாடாற்றினார்கள். இவ் ஆலயத்தின் மார்கழித் திருவாதிரை உற்சவம் கடந்த மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகியது. 30ஆம் திகதி செவ்வாய்க்கி ழமை கைலாசவாகனத் திருவிழாவும் ஜனவரி 3 ஆம் திகதி சனிக்கிழமை பெரிய சப்பறத் திருவிழாவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பஞ்சரத பவனியும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (63).

# வர்த்தக நிலையங்களில் திருட்டு கட்டுப்படுத்த ஒத்துழைப்பு அவசியம்

## நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் தெரிவிப்பு

(கரணவாய்)

நெல்லியடி வர்த்தக சங்கத் திற்குட்பட்ட வியாபார நிலையங்களில் தொடரும் திருட்டு நடவடிக்கையைக் கட்டுப்படுத்த வர்த்தகர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் எஸ். யோகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக வர்த்தக நிலையங்களில் இரவு வேளைகளில் திருட்டு நடைபெற்று வருவதாகவும், இதனைக கட்டுப்படுத்த வேண்டும் என வர்த்தகர்கள் தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர். இந்நிலையில் திருட்டைக் கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தரை நியமிக்க வேண்டும். இதன் மூலமே திருட்டைக் கட்டுப்படுத்த முடியும்., இதற்கு வர்த்தகர்களின் ஒத்துழைப்பு அவசியமானதாகும்.

அதாவது வர்த்தகர்கள் மாதாந்தம் குறிப்பிட்ட தொகையை வழங்கும் பட்சத்தில் தமது கடைக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு வழங்க ஏதுவாக இருக்கும் எனவும் இத னால் வர்த்தகர்கள் அச்சமின்றி எந்த நேரத்திலும் கடையை பூட்டி விட்டுச் செல்ல முடியும் என வும் வர்த்தக சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார். (18)

# பாடசாலை மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கல்

(கோப்பாய்)

கோப்பாய் கந்தசுவாமி கோவில் பரிபாலன சபையினர் நடாத்திய வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களுக்கான உதவித் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

.கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் நல்லாசிரியராகப் பணியாற்றி அமரத்துவம் அடைந்தவர் க.மார்க்கண்டு. அவரால் உயர்வு பெற்ற மாணவர்கள் அவரது பெயரால் ஐம்பது மாணவர்களைத் தேர்ந்தெடுத்து ஆலயப் பரிபாலன சபை ஊடாகத் தலா இரண்டாயிரம் ரூபா உதவித் தொகையை வழங்கியுள்ளனர்.

இந்நிகழ்வு பரிபாலன சபைத் தலைவர் இளைப்பாறிய அதிபர் க.சின்னராசன் தலைமையில் இடம்பெற்றது. (48)

# வடமராட்சி கிழக்கிற்கான போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது

## வீதிகள் சீரின்மையே இதற்கு காரணமென தெரிவிப்பு



(வடமீராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களுக்கான சில போக்குவரத்துச் சேவைகள் கடந்த சில தினங்களாக முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதால் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப் பிரதேசத்திலுள்ள பிரதான வீதிகள் கடந்த மூன்று தசாப்தங்களாகப் புனரமைக்கப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சகல பிரதான வீதிகளும் சுமார் 30 வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் மிகவும் சேதமடைந்துள்ளதால் இப்பகுதியில் போருக்குப் பின்னர் மீள்குடியர்த்தப்பட்ட மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக நாகர்கோவில் - சுண்டிக்குளம் வரையுமான சுமார் 45 கிலோமீற்றர் நீளமான வீதி கடந்த மூன்று தசாப்தங்களாக இன்னமும் புனரமைக்கப் படவில்லை.

இந்நிலையில் கடந்த சில நாட்களில் பெய்த மழையால் இப்பிரதேசத்தில் நாகர்கோவில் - சுண்டிக்குளம் வரையுமான பிரதான வீதியூடான போக்குவரத்து முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

குறிப்பாக அரச தனியார் பேருந்துச் சேவைகள் ஆழியவளையுடன் நிறுத்தப்படுவதால் யாழ். மாவட்டத்தின் கிழக்கெல்லைக் கிராமங்களான வெற்றிலைக்கேணி கடடைக்காடு போக்கறுப்பு (கேவில்) நித்தியவெட்டை ஆகிய கிராமங்களில் வசிக்கின்ற மக்களும் தொழில் நிமிர்த்தம் சுண்டிக்குளத்திற்கு செல்கின்ற மக்களும் கால்நடையாகச் செல்லவேண்டியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

, எனவே இந்தவீதியை உடனடியாகப் புனரமைத்து போக்குவரத்துச் சேவைகளைச் சீர் செய்ய வேண்டும் என்பது இப் பிரதேச மக்களின் கோரிக்கையாகவுள்ளது. (29)

# சாராயப் போத்தலுடன் நெல்லியடியில் ஒருவர் கைது

(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியில் இரவு வேளை ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளிற்குள் சாராயப் போத்தலை வைத்துக் கொண்டு சென்ற நபரை நெல்லியடி பொலிஸார் கையும் களவுமாகப் பிடித்துள்ளனர்.

குறித்த நபரை பொலிஸார் சோதனை செய்தபோதே இவரின் மோட்டார் சைக்கிளின் இருக்கைப் பகுதிக்குக் கீழ் போத்தல் சாராயம் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமித் பெரேரா தலைமையிலான பொலிஸ் குழுவினரே இவரைக் கைது செய்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத செயற்பாடுகளை முற்றாக கட்டுப்படுத்தும் நோக்கில் தாம் செயற்படுத்துவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (18)

# ஸ்கந்தாவின் ஆரம்பப் பிரிவுக்கு புதிய கட்டடம் நிர்மாணம்

(சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலைக்கு நவீன வசதிகள் கொண்ட புதிய கட்டட நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

15 பரப்பளவு விஸ்தீரணம் கொண்டமைந்த காணியிலேயே தனியான ஆரம்பப் பிரிவு அமையப்பெறுகின்றது. இந்த ஆரம்பப் பாடசாலை உருவாக்கத்துக்கு பழைய மாணவர் தாய்ச் சங்க உறுப்பின்ர்கள் ஒவ்வொருவரும் மிகவும் உந்துசக்தியாகச் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பழைய மாணவர் சங்க உப தலைவர்களில் ஒருவரான லயன் செ.மகாதேவா குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகவும், பழைய மாணவர் சங்க உப தலைவர்களில் ஒருவரும் வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் த.தேவராஜன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மலசலகூடம் அமைப்பதற்கு 5 லட்சம் ரூபா வழங்குவதாகவும், பழைய மாணவர் சங்க உறுப்பினர் லயன் ந.சண்முகவேல் சுற்று மதில் அமைத்துத் தருவதாகவும் உறுதியளித்துள்ளனர்


ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலையின் புதிய அமை விடத்துக்கு முன்னர் கீழ்த் தளத்துக்கு 7.5 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டது. தற்போது அதன் மேற் தளத்துக்கும் நிதி ஒதுக்கீடு மேற் கொள்ளப்பட்டுள்ளது. (63)

# சாதனை மாணவிக்கு உதவி

(கரணவாய்)

கொற்றாவத்தை கட்டைப்புளியடி அல்வாய் மேற்கு அல்வாய் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இராசரத்தினம் சுதாவின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைப்பாளர் அகிலதாஸ் ஒரு தொகைப் பணத்தை கையளித்துள்ளார்.

குறித்த மாணவி வறிய குடும்ப நிலையில் படித்து கலைப் பிரிவில் 3 பாடங்களிலும் ஏ பெறுபேற்றைப் பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இம்மாணவியின் சாதனையைப் பாராட்டி அவரது உயர் படிப்புக்காக பணத தொகையை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (18)



பிரபல சிறுகதை எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன் எழுதிய 'பிரபஞ்ச சுருதி' எனும் கவிதை நூல் பல நண்பர்களின்ஆத்மார்த்தமான அமைப்பான சித்தம் அழகியார் எனும் அமைப்பினரால் அண்மையில் யாழ்.பருத்தித்துறை ஞானாலய மண்டபத்தில் வெளியிட்டுவைக்கப்பட்டது. (48)

# கொலை செய்தது யார்? 2

## தமிழின் துப்பறியும் கதாபாத்திரங்கள் - கிங் விஸ்வா -

**1968**இல் குமுதத்தில் சுஜாதா மூலமாக ஒரு வழக்கறிஞர் அறிமுகமாகி பின்னர் எண்பதுகளில் இளைஞர்களின் துடிப்பாக மாறினார். கணேஷ் - வசந்த் ஜோடி முதலில் இருந்தே உருவாக்கப்படவில்லை. 1968இல் குமுதத்தில் வெளியர்நைலான் கயிறு கதையில் ஒரு தேர்ந்த




வழக்குரைஞராக அறிமுகமான கணேஷ், “வெளிப்படையாக தெரிவதை நம்பாதே” என்ற சித்தாந்தத்தின் அடிப்படையிலும், மனோதத்துவ ரீதியாகவும் வழக்குகளை எதிர்கொள்வார்.

இந்தக் கதையில் பொலிஸ் அதிகாரி ஒருவரை, தவறாகச் சேர்த்த வழக்கில் இருந்து விடுவிக்க, கணேஷ் வருவார். பின்னர் பாதி கதையில் காணாமல் போய் விடுவார். இதற்கு பிறகு வந்த “பாதி ராஜ்யம்” என்ற கதையில் நீரஜா என்பவர் ஒரு வாடிக்கையாளராக வந்து பின்னர் “ஒரு விபத்தின் அனாடமி” என்ற கதையில் இருந்து கணேஷின் அசிஸ்டெண்ட் ஆக மாறிவிடுவார்.

ஆரம்ப கால கதைகளில் வசந்தின் கதாபாத்திரமும் கலந்த கலவையாகவே கணேஷ் இருந்தார். காலப் போக்கில் வசந்த் தேவைப் பட்டிருக்கிறார். இதை சுஜாதாவே ஒருமுறை சொல்லி இருக்கிறார்

“கணேஷ் முதல்லே “சோலோ”வா இருந்தான். ஆனா கதை எழுதற போது ஸ்ட்ரக்சர் கஷ்டமா இருந்தது. கணேஷ் மனசில, நினைத்திருப்பதை சொல்ல கவுண்டர்பொயின்ற் தேவையாய் இருந்தது, எனவே பின்னர் வந்த கதைகளில் கணேஷ் - வசந்த் என்று உருவாக்கப்பட்டது”.

வசந்த் ஒரு சட்டக்கல்லூரி மாணவர். பயிற்சி பெற கணேஷிடம் அசிஸ்டெண்ட் ஆக சேருகிறார். “காயத்ரி” கதையில் முதன்முறையாக ஒரு ஜோடியாக செயல்பட ஆரம்பித்தார்கள். இதன் பிறகு விதி, மேற்கே ஒரு குற்றம், மேலும் ஒரு குற்றம், உன்னை கண்ட நேரமெல்லாம், மீண்டும் ஒரு குற்றம், அம்மன் பதக்கம், மெரீனா, புகார், ஐந்தாவது அத்தியாயம் என்று தொடர்ச்சியாக ஒரே கணேஷ் - வசந்த அட்டகாசம் தொடர்ந்தது. சுஜாதா எழுதிய இரண்டாவது வரலாற்றுப் புதினமான காந்தளூர் வசந்த குமாரன் கதையிலும் கூட கணேஷ் (கணேச பட்டர்) மற்றும் வசந்த் (வசந்த குமாரன்) வருவார்கள்.

இந்த சமயத்தில் தான் புஷ்பா தங்கதுரையும் ஒரு நாயகனை மையமாக வைத்து சில கதைகளை எழுத ஆரம்பித்தார். இவரது பிரதான நாயகன் இன்ஸ்பெக்டர் சிங் என்பவர்.

அதே நேரத்தில் ராஜேந்திர குமாரும் துப்பறியும் ஜோடிகளை வைத்து கதை எழுத ஆரம்பித்தார். இவரது கதாநாயக ஜோடியின் பெயர் ராஜா - ஜென்னி. ஆனால் இந்த கதைவரிசையில் இருக்கும் விசேடம் - வர்ணனையில் இருந்த கிளுகிளுப்பு தான். உதாரணமாக ஜென்னி புல்லட்டில் உட்கார்ந்து இருக்க, ராஜா “ஏன் இங்கே புடைத்து இருக்கிறது?” என்று கதையின் முதல்பராவிலேயே கேட்பார்.

இவர்களைத்தவிர 1973 முதல் 1982 வரை தமிழில் சொல்லிக் கொள்ளும்படியான துப்பறியும் நாயகனோ அல்லது ஜோடியோ இல்லை.

1982 - 1992 காலகட்டம் மாத நாவல்களின் உச்சம். ராஜேஷ்குமார் ஏற்கனவே சில பல நூற்றுக்கணக்கில் கதைகளை எழுதி பிரபலமாகி இருந்த வேளையில் 1982இல் இவர் தாய் வார இதழில் எழுதிய “உலராத ரத்தம்” கதையில் தான் முதன்முதலில் இன்ஸ்பெக்டர் கோகுல்நாத்தும், விவேக்கும் அறிமுகம் ஆனார்கள்.

இந்த கதாபாத்திரத்தின் பின்னணியைப்பற்றி ராஜேஷ்குமாரிடம் கேட்டபோது “நான் தமிழ்வாணனின் சங்கர்லால் கதாபாத்திரத்தின் தீவிர ரசிகன். அதே சமயம் எனக்கு விவேகானந்தர் மீது அளவு கடந்த மரியாதை உண்டு. எனவே நான் உருவாக்கும் பாத்திரத்தின் பெயரை விவேக் என்று வைத்தேன். இந்த கதாபாத்திரம் இளைஞர்களை கருத்தில் கொண்டு மிகுந்த முன்யோசனையுடன் உருவாக்கப்பட்டது” என்று சொன்னார்.

ராஜேஷ்குமார் எழுதிய விவேக் தோன்றும் கதை என்றால் வழக்கமாக விற்பனை ஆவதைவிட மூன்று மடங்கு அதிகமாக விற்கும் என்று சொல்கிறார் க்ரைம் நாவல், பாக்கெட் நாவல் ஆகியவற்றின் பதிப்பாளராகிய ஜி.அசோகன்.

விவேக்குக்கு ரூபலா என்ற மனைவியும், கோகுல்நாத் என்ற இன்ஸ்பெக்டரும், சமீபகாலமாக விஷ்ணு என்ற உதவியாளனும் துணையாக வருவார்கள். இந்த டீம் வரும்போதெல்லாம் கலகலப்புக்கு பஞ்சமே கிடையாது. அதே சமயம் ரூபலாவையும் சாதாரணமாக எடைபோட்டுவிட வேண்டாம். அவரும் பல சாகசங்களை புரிபவர்.

ராஜேஷ் குமாருக்காகவே 1986ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட மாத நாவல் தான் க்ரைம் நாவல். ஆரம்பத்தில் ராஜேஷ் குமார், ஜி.அசோகன் மற்றும் ஓவியர் அரஸ் ஆகிய மூவரின் மிரட்டல் கூட்டணி உருவானது. ஒரு கட்டத்தில் லட்சக்கணக்கில் விற்பனை ஆகி சாதனையும் படைத்தது க்ரைம் நாவல்.

(தொடரும்)


# கிணற்றில் விழச்சொல்லும் TNA.... தமிழர்கள் என்ன செம்மறியாடுகளா....?

**- கதிரவன் கட்டுரையிலிருந்து.**

**தே**ர்தலுக்கான திகதி நெருங்க நெருங்க இவர் வெல்லுவாரோ அவர் வெல்லுவாரோ என்று வெற்றியாளரின் பக்கம் தாவிக்கொள்ளக் காத்திருக்கும் கூட்டம், எங்கே யார் எதைக் கொடுப்பார்கள் அவர்கள் பக்கம் சாய்ந்து கொள்வோம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால் தமிழர்களோ இந்த தேர்தலில் தாம் என்ன செய்வது வாக்களிக்க வேண்டுமா? அல்லது புறக்கணிக்க வேண்டுமா? யாருக்கு வாக்களிக்கவேண்டும் யாரைப் புறக்கணிக்கவேண்டும் என்ற பல கேள்விகளுடன் தம்மால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த அடிப்படையில் மைத்திரியை ஆதரிப்பதாக அறிக்கை விட்டார்கள் என்பது விளங்கவில்லை. தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்டபோதும் இன்னும் முடிவெடுக்கவில்லை ஆலோசித்துக் கொண்டிருக்கின்றோம் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கின்றோம் என்று கூறிக்கொண்டிருந்தவர்கள் இன்று திடீரென்று



மைத்திரிபக்கம் சாய்ந்து கொண்டதன் காரணம் என்ன?

இவர்களின் பேச்சுவார்த்தை வெற்றியடைந்ததா? தமிழர்கள் சார்பாக இவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதா? அப்படியானல் இவர்கள் எந்த கோரிக்கையினை முன்வைத்தார்கள்....?

இவை எதற்குமே பதில் சொல்லாது வெறுமனே மைத்திரியை ஆதரிப்போம் என்று இவர்கள் கூறுவதை சரி என்று ஏற்றுக்கொள்வதற்கு தமிழ்மக்கள் என்ன செம்மறியாட்டுக் கூட்டமா?

வரப்போகும் தேர்தலிலே தமது நிலைப்பாடு என்ன என்பதை எதிர்பார்த்து காத்திருந்த மக்களுக்கு தமது தலைவர்கள் மீது அவநம்பிக்கையும் தாம் தவறானவர்களைத் தேர்ந்தெடுத்துவிட்டோமோ என்ற ஆதங்கமும்தான் இப்போது ஏற்படுகின்றது.

பொதுவேட்பாளரை தாம் ஆதரிப்பதற்கான காரணமாக அவர்கள் கூறுவது:

1. நாடு சர்வாதிகார ஆட்சியை நோக்கிச் செல்கின்றது.

2. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையினால் நீதித்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

3. பாராளுமன்றம் மதிப்பிழந்துள்ளது. இன்று பாராளுமன்றம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் கைப்பொம்மையாக மாறிக்கிடக்கின்றது.

4. அரசியலமைப்பின் 17ஆவது சட்டத்தை மாற்றியதன் மூலம் அரச நிர்வாகத்தின் முக்கிய பதவிகளுக்கு தாம் விரும்பியவர்களை நியமிக்கும் சர்வாதிகாரத்தை ஜனாதிபதி பெற்றுள்ளார். இது நாட்டிற்கும், நீதித்துறைக்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

4. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் எதேச்சதிகாரமானது சுதந்தர ஊடகங்களுக்கும், சிவில் அமைப்புகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட காரணங்கள் பிரச்சினைகள் யாவும் சிங்களமக்களுக்கும் உள்ளது இதற்காகவே தாம் மைத்திரியை ஆதரிப்போம் என்று தமிழ்க் கூட்டமைப்பு கூறுவது சரியா?

மைத்திரியினால் நல்ல ஒரு தீர்ப்பு கிடைக்கும் என்று நம்புவதாக சம்பந்தன் கூறியுள்ளார். ஆனால் அது எப்படி சாத்தியமாகும்?

தனது தேர்தல் விஞ்ஞாபனத்தினை தமிழ்மொழியில் கூட வெளியிடாதவர் இந்த மைத்திரிபால, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்கள் என்ற வார்த்தையினைக் கூட பிரயோகிக்க முடியாத இவரை இந்த நாட்டின் தலைவராக தேர்ந்தெடுக்கும்படி கூட்டமைப்பு சொல்வது சிறுபிள்ளைத்தனமான விடயம் என்றுதான் கூறவேண்டும்.

மகிந்தவை தோற்கடித்தே தீரவேண்டும் என்று தெற்கில் பல சக்திகள் ஒன்றிணைந்திருப்பற்கான காரணம் வேறு. அதனால் தமிழர்களுக்கு எந்த நன்மையும் கிட்டப்போவதில்லை. வெறும் பழி உணர்வை மட்டுமே மக்களுக்கு காரணமாக காட்டி மைத்திரியை ஆதரிப்போம் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதா?

ஒரு ஞானியிடம் இரண்டு பேர் வந்தனர்.

ஒருவன், "நான் ஒரு பெரிய பாவம் செய்து விட்டேன். என் மனம் அதை நினைத்து தினமும் துடிக்கிறது. நான் செய்த பாவத்துக்கு மீட்சி உண்டா?" என்று வருத்தத்தோடு கேட்டான்.

அடுத்தவன் ஞானியிடம், "நான் இவர் அளவுக்குப் பெரிய பாவம் எதுவும் செய்யவில்லை. சின்னச் சின்னப் பொய்கள், சிறு ஏமாற்றுக்கள் இப்படி நிறைய செய்துள்ளேன். தண்டிக்கும் அளவுக்கு இவை எல்லாம் பெரிய பாவங்களா என்ன?" என்று கேட்டான்.

ஞானி சிரித்தார். முதல் ஆளிடம், "நீ போய் பெரிய பாறை ஒன்றைத் தூக்கிவா..." என்றார்.

# பெரிய பாவமும் சிறிய பாவங்களும்



இரண்டாமவனிடம், "நீ போய் இந்தச் சாக்கு நிறைய சிறு கற்களைப் பொறுக்கி வா" என்றார்.

இருவரும் அங்கிருந்து சென்றனர்.

சிறிது நேரத்தில் முதலாமவன் ஒரு பெரிய பாறையைத் தூக்கி வந்தான். அடுத்தவன் சாக்கு நிறைய சிறு கற்களைப் பொறுக்கிக் கொண்டு வந்தான்.

இப்போது ஞானி சொன்னார், "சரி, இருவரும் கொண்டு வந்தவற்றை சரியாக எந்த இடத்தில் எடுத்தீர்களோ; அங்கேயே திரும்பப் போட்டுவிட்டு வாருங்கள்" என்றார்.

முதலாமவன், பாறையை எடுத்துக் கொண்டுபோய் எடுத்த இடத்தில் வைத்து விட்டுத் திரும்பினான்.

இரண்டாமவன் தயக்கத்துடன், "இவ்வளவு கற்களை நான் எப்படிச் சரியாக அவை இருந்த இடத்திலேயே வைக்க முடியும்?" என்று கேட்டான்.

ஞானி சொன்னார், "முடியாதல்லவா, அவன் பெரிய தவறு செய்தான். அதற்காக வருந்தி அழுது மன்னிப்புக் கேட்டு அவன் மாற்றுப் பரிகாரம் செய்து, அவன் மீட்சி அடையலாம். நீ சின்னச் சின்னதாக ஆயிரம் தவறுகள் செய்தும் அவை பாவம் என்று கூட உணராதவன். யாரெல்லாம் பாதிக்கப்பட்டவர்கள் என்பது கூட உனக்கு நினைவிருக்காது. அவனுக்கு மீட்சி சுலபம். உனக்குத்தான் மீட்சி என்பது மிகக் கடினம்."

---

தெற்கின் பேரினவாத சக்திகள் எல்லாமே ஒன்று சேர்ந்து மைத்திரிபக்கம் நிற்கும்போது அவர் வெற்றிபெற்றால் தமிழர்களின் நிலைதான் என்ன?

மிக மிக முக்கியமான விடயம், ஜாதிக ஹெல உறுமயவுடன் மைத்திரிபால செய்துகொண்ட ஒப்பந்தமே தமிழர்களின் சுயாட்சி என்ற கோரிக்கையினை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதுதானே! அப்படியாயின் மைத்திரியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிப்பதும் சுயாட்சி என்ற கோரிக்கையினை கைவிடுவதும் ஒன்றுதானே? அப்படியானால் கூட்டமைப்பு இதுவரைகாலமும் முன்வைத்த கோரிக்கைகளை குழிதோண்டிப் புதைத்து விட்டதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாகத் தனது முடிவை வெளியிட்டுள்ள நிலையில், வடமாகாண சபையின் கூட்டமைப்பு உறுப்பினராகிய அனந்தி சசிதரன் இந்தத் தேர்தலைப் புறக்கணிக்கும் வகையில் தான் வாக்களிக்கப் போவதில்லை என்றும் அவ்வாறு வாக்களிப்பது மனச்சாட்சிக்கு விரோதமான செயல் என்று பி.பி.சி. யிடம் தெரிவித்துள்ளார். வடமாகாண சபைக்கான தேர்தலில் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்ட விரோதமான ஒரு கொள்கையைக் கொண்ட ஒருவருக்கு எவ்வாறு வாக்களிப்பது, மக்களை அவருக்கு வாக்களிக்குமாறு எவ்வாறு கேட்க முடியும் என்று அவர் கேள்வி எழுப்புகிறார்.

மேலும் சில மாகாணசபை உறுப்பினர்களிடம் கேட்டபோது:

தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொதுவேட்பாளரை நிறுத்த தவறிவிட்டதால் இந்த தேர்தலை புறக்கணிப்பதுதான் சரி என்று நினைக்கின்றோம் ஆனால் என்ன செய்வது கட்சியின் தலைமை எடுத்த முடிவை எங்களால் மாற்றமுடியவில்லை என்று ஆதங்கப்பட்டுக் கொள்கின்றனர்.


யாழில் நடைபெற்ற பிரச்சாரத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தான் எந்த ஒரு ஒப்பந்தத்தையும் செய்துகொள்ளவில்லை என்று மைத்திரிபால கூறியிருந்தார். அப்படியானால் வெறும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் அவருக்கு வாக்களியுங்கள் என்று கூட்டமைப்பு கேரிக்கை விடுக்கின்றதா?

இந்த தேர்தலுக்கான தமிழர்களின் நிலைப்பாடு என்ன என்ற முடிவை ஏடுக்கத் தெரியாதவர்களா நீங்கள் என்று தமிழரசுக்கட்சியின் உறுப்பினர் ஒருவரிடம் ஆதங்கத்தோடு கேட்டபோது அவர் கூறினார் "நாங்கள் என்ன செய்ய? எங்கட பேச்சு அங்க எடுப்டாது. சம்பந்தன் அய்யாவும் சுமந்திரனும்தான் முடிவெடுப்பினம். நாங்களும் கட்சிக்குள்ள முரண்பட்டுக்கொண்டுதான் இருக்கிறம்" என்று வேதனையோடு தெரிவித்தார்.

உண்மையினைக் கூறப்போனால் இன்று தடுமாறிக்கொண்டிருக்கும் தலைமைகளினால் தடம்புரண்டு செல்லுமா தமிழ்த்தேசியம் என்ற பீதி தமிழர்களிடையே ஆரம்பிக்கத் தொடங்குகின்றது.

இன்று இருப்பது இரண்டே வழி ஒன்று தேர்தலை நிராகரிப்பது அல்லது யாரேனும் ஒருவரை ஆதரிப்பது. ஆனால் யாரை ஆதரிப்பது அதனால் என்ன நன்மை, தீமைகள் உண்டாகும் என்பதையெல்லாம் மக்களுக்குச் சொல்லவேண்டியவர்கள் நீண்டகால மௌனத்திற்கு பின்பு மைத்திரியை ஆதரிப்போம் என்று கூறினார்களே தவிர அதனால் தமிழர்களுக்கு என்ன நன்மை தமிழர்களுக்கு என்ன தீர்வு கிடைக்கும் என்பதை தமிழர்களுக்கு தெளிவுபடுத்தவில்லை.

**வெட்டியவன் வீட்டு வாசலில் நிற்கும் வாழையா தமிழினம்?**



# வேண்டாம் எண்ட ரயிலில ஏற முந்துறதும் இவைதான்!

## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

காங்கேசன்துறை வரைக்கும் ரயில் ஓடத் தொடங்கீட்டுது. இது நல்ல செய்தி எண்டதை கூட்டமைப்புக்காரர் ஏற்றுக் கொள்ள மாட்டினை. மாட்டுப் பட்டிக்குள்ளை வாழுறவனுக்கு மாட்டுச் சாணமும் மூத்திரமும் நிறைஞ்ச மணந்தான் பழகிப் போனது. வெட்டியானுக்கு சவம் எரியிற மணமே பழக்கமானது. அதுபோலை கூட்டமைப்பாருக்கும் (கூட்டமைப்புக்கூடு கலைஞ்சு கொண்டிருக்குது) மன்னிக்கவும் தமிழரசுக்காரங்களுக்கும் சீழும் நிணமும் நாறுகிற மக்களின்ரை அவலத்தைக் காணுறதே கனவாயிட்டுது. அதைப் பிலாக்கணம் பாடுறதே வாழ்வாகிப் போச்சுது. எனவே அவையளுக்கு இதெல்லாம் பெரிசாய் இருக்கேலாது.

றோட்டுப் போடுறதும், பாலங்கட்டிறதும், கட்டடங்கள் கட்டுறதும் மட்டும் அபிவிருத்தியில்லையாம். ஆரப்பர அதை மறுத்தவை? ஆனால் இந்த அபிவிருத்தியளின்ரை பெறுமதி அனுபவிக்கிற சனங்களுக்குத்தான் தெரியும். மண் றோட்டிலை குண்டு குழியளுக்கை விழுந்தெழும்பி, செக் பொயின்ருகளிலை அல்லற்பட்டு சனம் அந்தரிச்ச அந்தரிப்பு இவைக்குத் தெரியாது.

ரயில் ஓடாமல் பஸ்ஸுக்கு அடிபட்டு, அல்லோலப்பட்டதும் இவைக்குத் தெரியாது. தறப்பாள் குடிசையளுக்கை பாம்பு பூச்சியளுக்குப் பயந்து வாழ்ந்த அனுபவமும் இவைக்கு இல்லை. உலருணவுக்கு அதிகாலைக் கடுங்குளிரிலை லைனிலை நிண்டு அடிபட்டு, நெரிபட்டு வாங்கின அனுபவமும் இவைக்கு இல்லை.

கனடாவிலையும், லண்டனிலையும், சுவிசிலையும், சென்னையிலையும் வாழுகிற இவையின்ரை குடும்பத்துக்கு இந்த அபிவிருத்தியள் சின்ன விசியமாய் இருக்கலாம். தமிழ்த் தேசியம் பேசிப் புலம் பெயர்ந்தவங்களிட்டை தட்டிச் சுத்தி வாங்கின காசிலையும், ஒவ்வொரு ஆட்சியிலை உள்ளவர்களிட்டையும் பின்கதவாலை வாங்கின சலுகைகளிலையும் அவை சுகபோகம் அனுபவிச்சுக் கொண்டு, சனங்களைப் பார்த்து உது அபிவிருத்தியில்லை எண்டு சொல்லுகினம். வாலுகளும் அதை வேதமெண்டு நம்பி சனங்களிட்டை உரத்துச் சொல்லுகினம். கொஞ்சச் சனங்களும் அதை ஆமோதிச்சு அசல் பனங்கொட்டையள் எண்டு தங்களை நிரூபிச்சுக் கொண்டிருக்கினம்.

எனக்கெண்டால் காங்கேசன்துறைக்கு ரயில் ஓடுதெண்டவுடனை ஒரு கவலைதான் வந்தது. உவன் பாவி சிவாசிலிங்கம் ஒரு விறைச்ச கட்டை. ரயிலை மறிக்கிறனெண்டு போய் தலையைக் கிலையைக் குடுத்து ஏதேனும் நடந்திடுமெண்டுதான் அந்தக் கவலை. நல்ல வேளை. சிவாசிலிங்கத்தின்ரை தலைக் கறுப்பைக் கூடக் காணேல்லை. ஆராவது தள்ளி விழுத்தி விடலாம் எண்டாக்கும் எங்கையோ ஓடி ஒளிஞ்சிட்டான் பாவி.

சிவாசிலிங்கம் முன்வைக்கிற குற்றச்சாட்டு ஆமிக்காரனை ஏத்தத்தான் காங்கேசன்துறைக்கு ரயில் ஓடுதாம். ஆமிக்காரன் ஒரு அரசாங்க ஊழியன். எல்லா அரசாங்க ஊழியருக்கும் மூண்டு தொகுதி புகையிரத ஆணைச்சீட்டு இலவசமாகக் கிடைக்குது. அதை எல்லாரும் பயன்படுத்தத்தான் செய்வினை. அதை விட புகையிரதத்திலை பயணம் செய்யிறது செலவு குறைவு. எனவே, குடும்பம் பிள்ளை குட்டியளோடை வாழுகிற ஆமிக்காரனும் எப்பிடியோ புகையிரதத்திலைதான் போய் வருவான்.

இதுக்கு முன்னம் கிளிநொச்சியிலையும், பளையிலையும், யாழ்ப்பாணத்திலையும் வாகனங்களிலை கொண்டு வந்து புகையிரத நிலையத்திலை இறக்கி அங்கையிருந்து பயணம் செய்த ஆமியை சிவாசியர் காணேல்லையே? அதைவிட சாவகச்சேரியிலை ஒரு காம்பிலை இருக்கற ஆமியை காங்கேசன்துறையிலை கொண்டு போயோ ஏத்திவிடுவினை? பைத்தியக்காரன் பிதற்றுகிற மாதிரி இவங்கள் பிதற்ற அதைக் கேக்கிற சனங்களை என்னண்டு சொல்லுறது?

ரயில் முதலிலை வரேக்கை பெண்டுகளின்ரை கர்ப்பம் கலைஞ்சு போகும். ஹார்ட் அற்றாக் வரும் எண்டு சொல்லி கதை கட்டி ரயிலுக்குக் கல்லெறிஞ்ச சமூகமல்லே யாழ்ப்பாணச் சமூகம். பிறகு சீற் பிடிக்கிறதுக்காக படாத பாடு பட்டதும் இந்தச் சமூகந்தான்.

உந்த ஏசி ரயிலிலை ஒருக்கா ஏறிப் பாருங்கோ. மாகாணசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் எல்லாரையும் காணலாம். ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி எண்ட கதைதான்!

ரயில் மனிச வாழ்க்கையிலை முக்கியமான ஒண்டு. வெளிநாடுகளிலையும் எங்கடை ஆக்கள் கூடுதலாய் ரயிலிலைதான் பயணிக்கினை. பொருட்களை விரைவாக, மலிவாகக் கொண்டு போக அதுதான் உதவுது. ஒப்பீட்டு ரீதியிலை பாதுகாப்புக் கூடியது. அந்த வசதி சனங்களுக்குக் கிடைக்கிறது பெரிய விசியந்தான்!

இப்ப பார்த்தீங்கள் எண்டால் வவுனியாவுக்கு அங்காலை ஆசனப் பதிவு செய்யிறவை தவிர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் கொழும்பு வரைக்கும் நிண்டுதான் பயணிக்கிற நிலை! யாழ்ப்பாண வாசிகள் சொகுசாக இருக்கையிலை இருந்து பயணம் செய்ய அதுகள் பெண்கள், முதியவர்கள், பிள்ளைகள் எல்லாம் நிண்டு பயணிக்குதுகள்.

சில வேலைவெட்டி இல்லாத மாப்பிள்ளைமார் சீதனத்தை அனுபவிச்சுக் கொண்டு எனக்கு ஒண்டுந் தரேல்லை எண்டு பொம்பிளை வீட்டை வசை பாடுகிற மாதிரித்தான் தமிழரசுக் காரங்களும்! இதைச் சனங்கள் எப்ப உணருதுகள் எண்டதிலைதான் சமூகத்தின்ரை வாழ்வும் முன்னேற்றமும் தங்கியிருக்குது.






# பிறர் நலன்

அழகாபுரி என்ற கிராமத்தில் வாசுதேவன் என்பவர் வாழ்ந்து வந்தார். அந்தக்கிராமத்திலேயே வாசுதேவன் ஒருவர் தான் மளிகைக்கடை வைத்திருந்தார். சுற்றுப்பட்டிகளிலும் உள்ள மக்கள் அவர்கடைக்குத்தான் மளிகைச் சாமான்கள் வாங்க வருவார்கள்.

அந்தப் பகுதியிலிருந்து டவுன் பத்துக் கிலோ மீற்றர் தூரம் தள்ளி உள்ளதால் வேறு வழியின்றி வாசுதேவன் மளிகைக் கடையைத் தான் பலர் நம்பியிருந்தனர்.

ஆரம்பத்தில் நியாயமான முறையில் வியாபாரம் செய்து வந்தான். வாசு தேவன், பின்னர் தகாதோர் சொல் கேட்டு வியாபாரப் பொருட்களில் கலப்படம் செய்ய ஆரம்பித்தார்.

கலப்படம் செய்த பொருட்களை வியாபாரம் செய்ததில் கணிசமான லாபம் அவருக்குக் கிடைத்தது வாசு தேவன் ருசிகண்ட பூனையானார்.

மக்களின் நலனைப் பற்றி சற்றும் அக்கறை கொள்ளாமல் பணம் சம்பாதிக்கும் ஒரே நோக்கோடு வியாபாரப் பொருட்களில் கலப்படம் செய்து நிறைய லாபம் சம்பாதித்தார்.

சீனியில் ரவையைச் கலப்படம் செய்தல்.

புளியில் மண்ணைக் கலப்படம் செய்தல், மிளகில் பப்பாளி விதையை கலப்படம் செய்தல், மிளகாய்த் தூளில் செங்கல் தூளைக் கலப்படம் செய்தல் என்று வியாபாரப் பொருட்களில் கலப்படம் செய்ததால் அவருக்குக் கொள்ளை லாபம் கிடைத்தது.

இதனால் வாசுதேவன் அவ்வூரிலேயே பெரும் பணக்காரானார். பல நிலங்களை வாங்கினார். பெரிய வீடு கட்டினார்.

வாசுதேவனின் அநியாயத்தைக் தட்டிக் கேட்க யாருக்கும் துணிச்சல் இல்லை. பத்துக் கிலோமீற்றர் சைக்கிளை அழுத்தி டவுனில் போய் மளிகைச்சாமான்கள் வாங்கச் சங்கடப்படும் மக்களில் பெரும்பாலோனோர் இதையெல்லாம் சகித்துக் கொண்டு அவர் மளிகைக் கடையிலேயே சாமான்களை வாங்கி வந்தார்கள்.

ஆனால் வாசுதேவன் தன் வீட்டுச்சமையலுக்கு மட்டும் சுகாதாரமான பொருட்களை வாங்கி வைத்து விடுவார்.

அவரது இந்தச் செயலைக் கண்ட சில இளைஞர்கள் டவுனுக்குச் சென்று புகார் கொடுத்தார்கள். வாசுதேவனின் மளிகைப்பொருட்கள் கலப்படமாக இருந்தமை. தெரிந்தும் கூட விசாரிக்க வந்த சில அதிகாரிகளைத் தன் பணப்பலத்தால் சரிக்கட்டி விட்டார் வாசுதேவன்.

நாட்கள் நகர்ந்தன

வாசுதேவனுக்குக் குழந்தை என்றால் கொள்ளைப் பிரியம். திருமணமாகி பத்து வருடங்களாகியும் அவர் மனைவியின் வயிற்றில் புழுபூச்சி கூட கிடையாது.

குழந்தை ஆசை கொண்ட வாசுதேவன் போகாத கோவில் இல்லை. சுற்றாத குளம் இல்லை

இந்நிலையில் தீடீரென வாசுதேவனின் மனைவி கர்ப்பம் தரித்தாள்.

டவுனுக்கு அவளைக்கூட்டிச் சென்று டாக்டரிடம் காட்டினார். வாசுதேவன். அவருக்கு ஆண் குழந்தை பிறக்கப் போவதாக டாக்டர் சொல்லவே வாசுதேவன் மனம் மகிழ்ந்தார்..

டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்து மாத்திரைகளைத் தன் மனைவிக்குத் தவறாமல் வாங்கிக் கொடுத்தார்.

பத்து மாதங்களில் அவர் மனைவிக்கு பிரசவ வலியெடுத்து வாசுதேவன் டாக்ஸி பிடித்து மனைவியைக் கூட்டிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றார்.



மனைவியின் வயிற்றைப் பரிசோதித்த டாக்டர் வாசுதேவன் உங்க மனைவிக்குக் கர்ப்பப்பை ரொம்ப வீக்கா இருக்கு..." என்றார்.

வாசுதேவன் பதறிப் போனார்.

"என்ன டாக்டர் இப்படிச் சொல்றீங்க? நீங்க சொன்ன மருந்து மாத்திரைகளெல்லாம் தவறாம நான் என் மனைவிக்கு வாங்கிக் கொடுத்தேன்."

"ப்ச்.. நான் சொன்ன மருந்து மாத்திரைகளை நீங்க வாங்கிக் கொடுக்கல."

"சத்தியமா மருந்து மாத்திரையெல்லாம் வாங்கிக் கொடுத்தேன் டாக்டர். இதோ பாருங்க.."

தன் கைப்பையில் வைத்திருந்த மருந்து மாத்திரைகளை எடுத்து அவரிடம் காண்பித்தார் வாசுதேவன்.

"ஸாரி வாசுதேவன் .. அதுல பாதி மாத்திரைகள் போலியானவை. நீங்க நல்லா ஏமாந்துட்டீங்க

"டாக்டர்"

"யெஸ் வாசுதேவன். பாவிப் பசங்க எல்லாத்திலும் கலப்படம் செய்ய ஆரம்பிச்சுட்டாங்க. கலப்படத்தால அடுத்தவங்களுக்கு விளையுற தீமைகளைக் கொஞ்சம் கூட யோசிப்பதில்லை. பிறர்நலனைக் கருத்தில் கொள்ளுறதே இல்லை. பணம் ... பணம். பணம் மட்டும்தானா வாழ்க்கை? சாகும் போது பணத்தையா கொண்டு போகப் போறான் மனுஷன், ச்சே... தொழிலிலும் வியாபாரத்திலும் ஒரு நேர்மை வேண்டாமா?" என்று டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அங்கு ஒரு நர்ஸ் விரைந்து வந்து, டாக்டர் பேஷண்ட் இறந்துட்டாங்க.." என்றாள்

"அய்யோ.. சீதா லெட்சுமி.." அலறிக்கொண்டே ஓடினார் வாசுதேவன் .

தன் மனைவியின் நெற்றியில் முட்டி மோதிக் கதறினார்.

தொழிலிலும் ஒரு நேர்மை வேணாமா? சாகும் போது பணத்தையும் கொண்டுகிட்டுப் போகப்போறானா. மனுஷன்?" டாக்டரின் சொற்கள் வாசுதேவனின் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

"நான் விற்ற கலப்படப் பொருட்களில் எத்தனை பேர் இப்படி அவதிக்குள்ளாகி இருப்பார்கள்? தனக்குத் துன்பம் வந்தால் மட்டும் மனம் பதறுகிறதே?அது போலத் தானே மற்றவர்களும்! பிறர் நலனைப் போணாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? இனிமேலாவது நியாயமான முறையில் வியாபரம் செய்ய வேண்டும்." என்று அழுகையினூடே தீர்மானித்துக் கொண்டார் வாசுதேவன்.

**"தன்னலம் பேணுவதற்காக கலப்படம் செய்வது மிருக வாழ்க்கை. பிறர்நலம் பேணுவதே மனித வாழ்க்கை. என்றும் பிறர்நலம் பேணுவோம் மனிதனாக வாழ்வோம்.**

# ஆபத்தான வேளையில் ஐயோ என்று குளறலாமா?

ஒரு மரவெட்டி மரத்தின் கிளைமீது அமர்ந்து கொண்டு அந்தக் கிளையையே வெட்டினானாம். உமாதேவியார் பார்த்து விட்டு, இவன் என்ன முட்டாளாக இருக்கிறானே, கீழே விழுந்து சாக அல்லவா போகிறான் என்று சிவபெருமானிடம் சொன்னாராம். அதற்கு அவர் சொன்னாராம், சரி அவன் உதவிக்கு உன்னைக் கூப்பிட்டால் நீ போய் காப்பாற்று என்னைக் கூப்பிட்டால் நான் காப்பாற்றுகிறேன் என்றாராம்.இருவரும் மிகவும் கவனமாக அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்களாம்.

அவன் இருந்த கிளை இறுதியாக முறிந்து விழுந்தது. அவன் "ஐயோ" என்று கதறிக்கொண்டே கீழே விழுந்தான். விழுந்த வேகத்தில் செத்துப்போனான். உமாதேவியார் என்ன இறந்து போனானே என்றாராம். அதற்கு சிவன் சொன்னாராம், அவன் எமனின் மனைவி "ஐயோ" வை அல்லவா கூப்பிட்டான். அதுதான், ஐயோ வந்து அவன் உயிரை எடுத்துக் கொண்டு போய் விட்டார் என்றாராம்.

**அதான் "ஐயோ" என்று ஏன் சொல்லக் கூடாது என்பார்கள்**



# போருக்கு முந்திய கால கட்டத்தின் வாழ்வை சித்திரிக்கிறது "பிரபஞ்ச சுருதி"

## மூத்த கவிஞர் ராதையன் புகழாரம்

பிரபஞ்சசுருதி எனும் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்ற கவிதைகள் போருக்கு முந்திய கால கட்டத்தில் எம் மக்களின் வாழ்க்கைக் கோலங்களை சித்திரிப்பதாகவே அமைகின்றன. இது மன மகிழ்ச்சியைத் தருகின்றது. என மூத்த கவிஞர் ராதையன் தெரிவித்தார்.

மூத்த சிறுகதை எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன் எழுதிய 'பிரபஞ்ச சுருதி' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா 'சித்தம் அழகியார்' எனும் அமைப்பினரின் ஏற்பாட்டில் பருத்தித்துறை ஞானாலய மண்டபத்தில்இலக்கியச் சோலை து.குலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

1965 மற்றும் 1975 ஆம் ஆண்டுகளில எழுதப்பட்ட இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகள் அக் கால கட்டத்து எம் மக்களின் வாழ்கைக் கோலங்களைச் சித்திரிக்கின்றன. மரபு வழியில் அமைந்த இக் கவிதைகளை தற்போதைய காலகட்டத்தில் வெளியிடுவது துணிகரமான முயற்சியாகும். இந்தத் தொகுப்பை வெளியீடு செய்து வைக்கும் சித்தம் அழகியார் அமைப்பினரைப் பாராட்டுகின்றேன் என்றார்.

நூலின் நயப்புரையை ஆற்றிய கவிஞர் த.ஜெயசீலன் குறிப்பிடுகையில் சண்முகனின் கவிதைகள் எல்லாமே யாப்பமைதிக்குட்பட்ட மரபு வழி வந்தவையாகும் அவர் தனது அனுபவங்களையே கவிதையாக்குகிறார். உதாரணமாக நித்திரையை ஒரு பெண்ணாக உருவகித்துப் பாடியுள்ளார். தனக்குச் சேவையாற்றிய தாதிகளைப் பாடியுள்ளார். கனவில் பூம்புகாரில் உலா வந்துள்ளார். பேராதனை முருகனுக்கு ஆற்றுப் படை எழுதியுள்ளார் என்றார்.

நூலாசிரியர் குப்பிளான் ஐ.சண்முகன் தனது ஏற்புரையில் எனது அனுபவங்களையே நான் பாடியுள்ளேன். புத்திளமைப் பருவத்தில் வாழ்க்கை வடிவமைக்கப்பட்ட காலத்தில் கிளர்ந்த என் உணர்வுகளே இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகள் என்று கூறித் தன் இளமைக்கால இனிமையான அனுபவங்களை தந்திருக்கிறேன் என்றார்.

நூலைக் கவிஞர் ராதையன் வெளியிட முதற்பிரதியைக் கௌரிபாலா பெற்றுக் கொண்டார். குறித்த கவிதைத் தொகுப்பில் 30 கவிதைகள் 61 பக்கங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (63)



யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியில் அமைந்துள்ள மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலைக்கு அண்மையில் வீதி ஓரமாக குப்பைகள் அகற்றப்படாதுள்ளதை இங்கு காணலாம். (பா)

# ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து கூட்டத்தில் கலந்தவர்களுக்கு நன்றி

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அழைபபின் பேரில் எதிர்பாராத வகையில் கலந்து கொண்டிருந்த பெருந்திரளான எமது மக்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன என ஈ.பி.டி.பி கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (ஜகன்) தெரிவிததுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் எதிர்பார்த்ததைவிட பன் மடங்கு அதிகமாக மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது ஆதரவினை ஜனாதிபதிவுக்கு தெரிவித்திருந்தமை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய எமக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும் என்பதுடன் இவ்வாறு பெருந் திரளான மக்கள் கலந்து கொண்டமையினால் நாம் ஏற்கனவே திட்டமிட்டிருந்ததன் பிரகாரம் அனைத்து மக்களையும் உரிய முறையில் உபசரிக்க இயலாமற் போனமை தொடாபில் நாம் பெரிதும் மனம் வருந்துகின்றோம் என்பதையும் எமது மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

# பயிர்ச்செய்கையில் விவசாயிகள் மும்முரம்

(அச்சுவேலி)

தொடர்ந்து பெய்து வந்த கனமழை தற்போது ஓய்ந்துள்ள நிலையில் அச்சுவேலி, ஆவரங்கால், தம்பாலை,வளலாய், பகுதி விவசாயிகள் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கான வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக தமது வீடுகளில் உள்ள இயற்கைப்பசளைகள், மற்றும் குழை வகைகளை தமது தோட்ட நிலங்களுக்குள் போட்டு அவற்றை பரவி நிலத்தைப் பண்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் ஏற்கனவே தமது தோட்ட நிலங்களை பண்படுத்தி வைத்திருந்த விவசாயிகள் தற்போது வெங்காயம் மற்றும் மிளகாய் பயிர்களை நாட்டி வருவதனையும் காண முடிகின்றது.

தொடர்ந்து இவ்வாறு மழைபெய்யாது காணப்பட்டால் அநேகமான விவசாயிகள் தமது பயிர்ச் செய்கையினை முழுமையாக மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (85)

# விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் கல்விப்பீடத்தினால் நடாத்தப்படும் முன்பள்ளிக் கல்விச்சான்றிதழ் கற்கை நெறிக்கான புதிய மாணவர்களை இணைத்துக கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 18 வயதினைப் பூர்த்திசெய்தவர்களாகவும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வில் கணிதம், தமிழ் உபட்ட 6 பாடங்களில் சித்தியடைநதவர்களாகவும் இருத்தல் வேண்டும்

# பதிவிறக்கப் பெட்டகம்

கல்லுக்குள் ஓர் உருவத்தைப் பார்க்கக் கலைஞனால் மட்டுமே முடியும். எல்லாப் பொருளுமே ஒரு வடிவத்தை எயதும் தன்மையினதாம். ஆனால் மனிதன் மட்டுமே அதில் தத்துவார்த்தம் பெற வல்லவன். கலைஞன், அதுவரை மெய்மைப் படாத, ஆனால் பொருள்களில் உள்ளுறையும் ஒன்றிற்குத் தன் வாழ்நாளை அர்ப்பணிக்கிறான். அவனுக்கு சகோதரனே தத்துவவாதி.

**– அரிஸ்ரோட்டில்**

எனக்குச் சொற்களை மிகவும் பிடிக்கும். அறியப்படாத ஏதோவொரு உலகிலிருந்து அவை தோன்றுகின்றன. வெள்ளி மீன்களைப் போல் துள்ளிக் கொண்டிருக்கக் கூடியதும், கூழாங்கற்களைப் போல வடிவேறியதுமான சொற்களைத் தேடி ஓடுகிறேன். ஒரு பழத்தைப் போல அவற்றைத் துடைத்துத் தோலஉரிதுக் கடித்துத் தின்பேன். கடினமான சொற்களை உருக்கிக் குடிப்பேன். பேராசையுடன் சொற்களைப் பிடித்து என் கவிதையில் சேகரித்து வைப்பேன். பிரபஞ்சம் அணுக்களால் அல்ல, சொற்களால்தான் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

**– பாப்லோ நெரூடா**

சலனமில்லாத ஒரு கற்சிலையைப் போல படுத்திருக்கிறேன். என்னைச் சுற்றிலும் வார்த்தைகள் பூச்சிகளைப் போல பறந்து கொண்டிருக்கின்றன. **– வேஜீனியா வுல்ப்**

உலகிலேயே நான் மிகவும் பயப்படுவது வெற்றுக் காகிதத்தைக் (Plain Paper) கண்டுதான். அதில் என்ன எழுதப்படப் போகிறது என்று எந்த எழுத்தாளருக்கும் தெரியாது. சண்டைக் காளையைப் போலவே எழுத்தும் எந்தப் பக்கம் திரும்பப் போகிறது என்று எவராலுமே சொல்லிவிட முடியாது.

**– எர்னெஸ்ட் ஹெமிங்வே**

இந்த உலகத்தை நாம் உருவாக்கவில்லை; ஆனால் இதற்கான அர்த்தத்தை நாம் தான் உருவாக்குகிறோம். எப்படி என்றால் – காட்டில் ஒரு மரம் வீழ்கிறது; அங்கே அதை கவனிக்க யாருமே இல்லை என்றால் அந்த மரம் வீழ்ந்ததில் எந்த அர்த்தமும் இல்லை. ஒரு சத்தம் கேட்கும். அவ்வளவுதான். ஆனால் அந்த இடத்தில் அதை ஒரு மனிதன் பார்க்கிறான என்றால் அந்த மரம் வீழ்ந்தது என்பதன் அர்த்தம் உருவாகிறது. அதைப் போலவே இரண்டு விதமான வாசகர்கள் இருக்கிறார்கள். ஒன்று, மாடு அசை போடுவதைப் போல வாசிப்பதை வாசிப்பதோடு மறந்து விடுவது. அந்தப் புத்தகம் அந்த வாசகரிடம் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. இன்னொரு வித வாசகர், தான் படித்ததைத் தன்னுடைய அனுபவத்தையும் ஆளுமையையும் கொண்டு மறு உருவாக்கம் செய்கிறார்.

**– ஜீன் போல் சார்த்தர்**

நாம் யார்? ரத்தமும் சதையுமா? அல்லது அறியுணர்வு மட்டுமா? எப்படி நாம் பார்க்கிறோமோ அப்படித்தான் அமைகிறது உலகம். பார்ப்பதால் அல்லது உணர்வதால் மட்டுமே உளவாகின்றன பொருட்கள். **– ஜோர்ஜ் பெர்க்ளி**


விமர்சனம் சார்ந்த அனைத்து எண்ணப்போக்குகளும முடிவுகளும் உண்மையில் பல தளங்கள் கொண்ட ஏதேனும அரசியல் பொருளாதார சிந்தனையோட்டத்தின் முகமூடிதான். ஆகவே, எந்தவிதமான சார்பும் அற்ற நடுநிலையான – மாசற்ற – விமர்சன நோக்கு சாத்தியமே இல்லை.

**– ரோலான் பார்த்**

ஹோர்ஹே லூயிஸ் போர்ஹெஸின் 'Way to Al-Mutasim' என்ற கதையில் திருச்சிராப்பள்ளி பாலக்கரை ஏரியாவில ஒரு முஸ்லிம் சிறுநீர் கழிப்பதற்காகத் தெருவோரத்தில் சிறிய செங்கல் துண்டைத் தேடினான் என்று எழுதுகிறார். சிறுநீர கழித்துவிட்டுச் சுத்தம் செய்வதற்காக தமிழ்நாட்டின் ஊர்ப்பகங்களில் இருந்த பழக்கம் அது. இப்போது நவீனபாணிக் கழிப்பறைகள் வந்துவிட்டதால் அந்தப் பழக்கம் அருகியிருக்கலாம். விஷயம் அது அல்ல. போர்ஹெஸ் அவ்வளவாகப் பயணம செய்ததில்லை. அவருக்குத் தெரிந்ததெல்லாம் அவருடைய புவனர்ஸ் அயர்ஸ் நூலகம் மட்டுமே. பின்னாளில் கண்பாரவையும் போய்விட்டது. இந்தியாவுக்கு வந்ததே இல்லை. ஆனாலும் எப்படி அவருக்கு திருச்சிராப்பள்ளி பாலக்கரையில் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வசிப்பதும் அவர்கள பழக்கவழக்கங்கள் பற்றியும் நுணுக்கமாகத் தெரிந்தது? அவரது விரிவுபட்ட வாசிப்புத்தான். **– எக்ஸைஸல் நாவலில்**

# வெற்றிலை உற்பத்தியை அதிகரிப்பதற்கு திட்டம்

## விவசாய ஏற்றுமதித் திணைக்களம் நடவடிக்கை



(கொழும்பு)

வெற்றிலை உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் உரிய அதிகாரிகளுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ள விவசாய ஏற்றுமதித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண் டுள்ளது.

இச்செயற்பாட்டினூடாக தேயிலை உற்பத்தியை விரிவடையச் செய்வதுடன் கூடிய வருமானத்தை உற்பத்தியாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும். வெற்றிலைக்கு தற்போது நிலவும் கேள்வியே இதற்கு முக்கிய காரணமாகும்.

ஆண்டுதோறும் பலன் பெறக கூடிய இப்பயிரினை நாடு முழுவதும் நாட்ட முடியும் என்ற போதிலும் அதற்கான பொருத்தமான நிலை குருணாகலை- கம்பஹா- கேகாலை- களுத்துறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களிலேயே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் வன்முறைகளா? உடன் அழைக்க ஏற்பாடு




(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில், அதிகரிக்கும் வன்முறைகளைத் தடுப்பதற்காகவும் மட்டுப்படுத்துவதற்காகவும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிறுவனம் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

எனவே பிரதேசங்களில் மேற்படி வன்முறைகள் ஏற்படுவதற்கான அடையாளம் தெரியும் பட்சத்தில், அவசரமாக தங்களைத் தொடர்பு கொள்ளும்படி அவ்வமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதன்பிரகாரம் மாகாண ரீதியில் தனித் தனியாக ஒழுங்கு செய்துள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

***தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு:***

வட மாகாணம் -0114062185
வடமேல் மாகாணம் -0114062186
வடமத்திய மாகாணம் -0114062187
மத்திய மாகாணம் -011-4062182
கிழக்கு மாகாணம் - 0114062184
மேல் மாகாணம் -011 4062181
சப்ரகமுவ மாகாணம் -011 4062189
தென் மாகாணம்- 011 4062183

# கனகராயன் குளம் கொலை இளைஞர் ஒருவர் கைது

வவுனியா, கனகராயன் குளத்தில் இம்மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி கனகராயன்குளத்தில் உள்ள வீடொன்றில் வவுனியா, கத்தார் சின்னக் குளத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

மேசன் தொழிலாளியான இவர் கனகராயன்குளத்தில் தங்கியிருந்து வீடுகள் மற்றும் கட்டடங்களை ஒப்பந்தத்துக்கு பெற்று காட்டிக் கொடுத்து வந்துள்ளார். இந்த நிலையில் புதுவருட தினத்தன்று அவர் தங்கியிருந்த வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளை கனகராயன் குளம் பொலிஸார் மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் கொலையுண்டவருடன் பணியாற்றியவர் என சந்தேகிக்கப்படும் வவுனியா சாந்த சோலையைச் சேர்ந்த 21 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், கைது செய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் கனகராயன் குளம் பொலிஸார் தெரிவித்துள்ளார்.


# தாமரைக் கோபுர நிர்மாணம் இவ்வருடத்தில் பூர்த்தியாகும்

(கொழும்பு)


கொழும்பில் நிர்மாணிக்கப் பட்டு வரும் தாமரைக் கோபுரம் மகிந்த ராஜபக்ஷ தொலைத் தொடர்பு கோபுரத்தின் நிர்மாண வேலைகள் இந்த ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தொலைத் தொடர்பு ஒழுங்கு படுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட தெரிவித்தார்.

இந்த தாமரை கோபுர நிர்மாண வேலைகளுக்காக 104.3அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டன.

350அடி உயரமான இந்த கோபுர கட்டடத் தொகுதி பார்வையாளர் அரங்கு, உல்லாச ஹோட்டல்கள், தொலைக்காட்சி கோபுரங்கள் ,தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைக்கப்படுகிறது.



## பரமர் சங்கமம்



'தட்டிக்கேக்க ஆளில்லாட்டில் தம்பி சண்டப் பிரசண்டன்' எண்டது அனுபவ மொழி. இப்ப அந்த நிலைமைதான் தாண்டவமாடுது. அவனவன் நினைச்சபடி நடக்கிறேதான் நடைமுறையாய் போச்சு. ஆண்டாண்டு தோறும் வரவு செலவுத் திட்டத்தில் இலட்சக்கணக்கான மில்லியன் பாதுகாப்புக்காக ஒதுக்கப்படுகிறது.

பாதுகாப்புப் பணியில் ஒன்றுதான் காவல்துறையும் அவர்களின் பணிசட்டம் ஒழுங்கைப் பேணுவதே கடந்த வருடங்களில் யாழ்.காவல்துறை நிலையத்தில் வாரத்தில் ஒருநாள் பத்திரிகையாளர்களுக்கு கலந்துரையாடல் இடம்பெற்று வந்தது. அவ்வேளை போக்குவரவு சம்பந்தமான அறிவூட்டலை மக்களுக்கு வழங்கவும் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

உண்மையில் நித்திரையாக இருப்பவனையே எழுப்பலாம் நடிப்பவனை எழுப்பமுடியுமா? மக்களுக்கு அவை தெரியாத ஒண்டில்லை. மக்களென்கையில் சாரதிகளும் அடங்குவர். கடந்த 24 ஆம் திகதி மாலை 6 மணி இருக்கும். யாழ்.சிவன்கோவில் முன்னாக என்னை விலத்திச் சென்ற சிற்றூர்தி தரித்தது.

அதனை விலத்தி என்ர சைக்கிளை எடுக்க முனைஞ்சன் வெளிக்கிட்ட வாகனம் சைக்கிளின் பின்பக்கம் மோதியது. ஒருவிதமாக சமாளித்து வீதிக்கரைக்குக் கொண்டு சென்று நிறுத்திவிட்டு சிற்றூர்தியை நோக்கிப் போய் பார்த்தன் இளவாலை செல்லும் வாகனம்.

எங்கோ பாத்துக் கொண்டு வாகனத்த சாரதி எடுத்ததாலேயே இது ஏற்பட்டது. அவரொன்றும் கதைக் கேல்லை. நடத்துநர் என்னையா எண்டார் சொன்னன். புழை விட்டது நீ தான் எண்டார் மறுபக்கம் நிண்ட அவருக்கு தெரியுமா? சாரதி ஒண்டுமே பேசேல்லை.

சும்மா அலம்பாமல் போடா வானை எடு எண்டார் பக்கத்தில் இன்னொண்டும் சேர்ந்து என்னைப் போடா எண்டுது. என்னைப் போல் இன்னொருவரெண்டால் அதில் பெரிய களேபரமே ஏற்பட்டிருக்கும். பொலிஸ் கோடு கச்சேரி என்னத்துக்கு இருக்கு வாகனம் முன்னால் போகும் அதனைச் செலுத்தும் சாரதியின் பார்வை பின்னால் போகும்.

இந்த லட்சணத்தில் காதுக்கை ஒண்டை வைச்சுக் கொண்டு வீதிகளில் வாகனங்களை ஓட்டுவினம். மதுபோதை மட்டுமா விபத்துக்களை நடத்தும்?.2014 ஆம் ஆண்டில் விபத்துக்கள் கூடிய ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கைக் கடைப் பிடிப்போர் தட்டிக்கேக்க முன்வந்தால் சண்டப் பிரசண்டரெல் லாம் எந்த மூலைக்குச் சொல்லுங்க பாப்பம்..

## அமைதிப் பேரணியை அடுத்து

# முல்லைக்கடலில் அத்துமீறிய மீன்பிடித்தொழில் இடைநிறுத்தம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் அமைதிப் பேரணி நடாத்தப்பட்ட பின்னர் இந்திய றோலர்களின் அத்துமீறிய மீன்பிடி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தலைவர் அந்தோனிப் பிள்ளை மரியராசா, நேற்று முன் தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்றம் நடைபெற்ற நாளிலிருந்து பல நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்துள்ளோம். இந்திய றோலர்களின் அத்துமீறிய மீன்பிடி மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறை ஆகியவற்றால் எமது கடற்றொழிலாளர்கள் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளார்கள்.

ஆழ்கடலில் இருந்து கரையினை நோக்கி மீன்கள் வரும் போது அம்மீன்களை இடைமறித்து சுருக்குவலை, லைட் ஆகிய அரசினால் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பிரயோகிப்பதன் காரணமாக மீன்கள் ஆழ்கடலுக்கு மீளவும் செல் கின்றன. இதனால் கரையோர மீன்பிடித்தொழில்கள் கடந்த 05 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பல இடங்களுக்கும் அறிவித்தோம். தைமாதம் எங்களுக்கு முக்கிய தொழில் நடைபெறுகின்ற மாதமாகும். தைமாதம் இறால் கூடுதலாக பிடிபடுகின்ற காலமாகும். இறால் தொழிலை நம்பியிருக்கின்ற இக்காலத்தில் இந்திய றோலர்களின் அத்துமீறல்கள் கூடுதலாக காணப்படுகின்றன.

ஆனால் போர்க் காலத்தில் இவ்வாறான நிலைமை காணப்படவில்லை. போருக்குப் பின்னரான தற்போதைய சூழலில் இந்திய றோலர்களின் நெருக்கடி கூடுதலாகவுள்ளது. மார்கழி மாதத்திலிருந்தே இந்திய றோலர்களின் நெருக்கடி கூடுதலாகவிருக்கிறது.

கடந்த 04 ஆண்டுகளாக இதே நெருக்கடி தொடர்கின்றது. இந்நிலையில் கடந்த 12ஆம் திகதி இந்திய றோலர்களின் மீன்பிடிக்கு எதிராக அமைதிப்பேரணியொன்றினை நடாத்தியிருந்தோம்.

முல்லைத்தீவு கரை யோரத்திலுள்ள 26 மீனவ சங்கங்களின் ஆண்கள் பெண்கள் இணைந்து இவ் அமைதிப்பேரணியினை நடாத்தியிருந்தோம். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்ற ஒரு அரசியல் காலம் என்பதன் காரணமாக இவ் அமைதிப் பேரணி பெரும் வெற்றியினை அளித்துள்ளது.


இந்திய றோலர்களின் வரவு தற்போது குறைவடைந்துள்ளது. இந்திய றோலர்களின் வரவு தொடர்ந்து தடைசெய்யப்பட வேண்டும். . தேர்தல் முடிந்த பின்னரும் இந்திய றோலர்கள் வரக்கூடாது.

அப்படி வருமானால் அமைதிப்பேரணியினை நடாத்துவோம். அதனை அரசே பார்த்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ளமுடியும். மற்றையது அட்டைத்தொழில், சுருக்குவலைத்தொழில், லைட். டையனமட் ஆகிய தடை செய்யப்பட்ட தொழில்கள் தென்னிலங்கையிலிருந்து வருகை தரும் மக்களினால் எமது கடற்பரப்பில் செய்யப்படுகின்றன. தென்னிலங்கையிலிருந்து வந்து சட்ட விரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்களை· தடைசெய்யவேண்டிய பொறுப்பு கடற்றொழில் அமைச்சுக்குள்ளது.

எமது மாவட்ட கடற்றொழில் திணைக்களம் கடற்றொழில் அமைச்சு சொல்வதைத் தான் செய்கின்றது.


கடற்றொழில அமைச்சு சொல்வதை கடற்றொழல் திணைக்களம் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக் கின்றது. நாம் தொடர்ந்து பாதிக்கப்படக்கூடாது. எமக்குள்ள தடைகள் நீங்குமானால் இவ்வருடத்திலிருந்து சிறந்த வாழ்வாதாரத்தை மக்கள் அடைவார்கள் எனவும் தெரிவித்தார்.

22) தரப்பட்ட படத்தில் உள்ள ஒவ்வொரு சிறிய பெட்டிகளும் சமமானவை. இவைக்கேற்ப சமநீளமான எத்தனை செவ்வகம் பெறலாம்.



(i) 02   (ii) 03   (iii) 04

தரப்பட்ட சதுரமுகிகள் ஏதோ ஒரு அமைப்புக்கு ஏற்ப புரட்டப்பட்டுள்ளன. அதனை நன்கு அவதானித்து விடை தருக



23) (• •) இதற்கு எதிர் உள்ளது

(i) ⁝⁝   (ii) ∴   (ii) ⁘

24) (•) இற்கு எதிரில் உள்ளது

(i) • •   (ii) ⁝⁝⁝   (iii) ∴

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 1. பாரதி மகாவித்தியாலயம்   2. பாரதிவித்தியாலயம் மாணவர் மன்றம்   3. பேராசிரியர் மணிகண்டவாசன்   4. 01.05.2014   5. மு.ப.9.30   6. மட்டக்களப்பு

(02) 1. இளநீர்   2 .பழங்கள்   3. பழம்   4. காய்க்கிறது

(03) 1 அரிசி, முத்து, வைரம்

(04) 1.உழவன் வயலை உழுகின்றான்   2.நீர் கொதித்து ஆவி வெளியேறுகின்றது   3.தாத்தா பத்திரிகை வாசிக்கின்றார்   4.படைவீரன் தீயை அணைக்கின்றான்

(05) 1.வாழ்ந்தார்   2.உள்ளன   3.கூறுகிறது   4. விட்டது   5. தொங்குகின்றன

(06) 1.இளநீர்   2.காளான்   3. பென்சில்   4. தண்ணீர்   5.முட்டை

(07) 1.பூக்கள் பூத்தன   2.மலர்கள் வாடின   3. வீடுகள் உடைந்தன   4.பட்டங்கள் வானில் பறந்தன   5.மாணவர்கள் புத்தகங்கள் வாசிக்கின்றார்கள்

(08) 1.பள்ளம்   2.செலவு   3.தீமை   4.அசுத்தம்   5.இடம்   6.கோழை

(09) 1.வேலை   2. கோல்   3.தேடி   4.கோலம்   5.வேலி

(11) 1. கனைக்கும்   2.கரையும்   3.எக்காளமிடும்   4.அலறும்   5.கொக்கரிக்கும்   6. கத்தும்

(12) 1. .   2. ?   3. ,   4. ?

(13) 1.கரப்பந்து   2. காற்பந்து   3.சடுகுடு   4.கிளித்தட்டு   5.ஆறு

(14) 1. படகு,சைக்கிள்,வானூர்தி   2.ஓடம்,புகைவண்டி,பலூன்

(16) 1.பாடசாலை, முதல், சுத்தம்செய்ய, தூசுகளை, சுத்தம், கரும்பலகை, தூசுகளை

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015


பகுதி - I
45 நிமிடம்

# கல்வி முரசு




புள்ளிக்கோடுள்ள இடத்தில் வரும் விடை யாது?

01)



புள்ளிக்கோட்டில் வரும் விடையைக் கண்டு கீறிடுக

02)



(I) 9
(II) 11
(III) 10


03)

| | | |
|---|---|---|
| ?<br>---- | 6 | 9 |
| 24 | 3 | 12 |
| 21 | 18 | 15 |

(I) 26
(II) 27
(III) 28


04) 3, 5, 9, 15, 23 .......   (i) 33   (ii) 35   (iii) 31

05)




(i) 41   (ii) 39   (iii) 49


06)




(i) 100   (ii) 36   (iii) 64


ஒத்த இரு அமைப்பைக் கொண்ட படக் கூட்டத்தின் விடையின் கீழ் கோடிடுக

07)





(I) AD
(II) AC
(III) CB

08) A B C D



(I) BC
(II) AC
(III) AB


09) A B C D




(I) BC
(II) AB
(III) AC

வெற்றுக் கூட்டில் வரும் விடையைக் கண்டு கீறிடுக


10)






(I) (II) (III)


11)






(I) (II) (III)


12) வினாக்குறி உள்ள இடத்துக்கு வரும் விடை யாது?



(I) (II) (III)




13) தரப்பட்ட அமைப்பில் எத்தனை முக்கோணிகள் உள்ளன?



(I) 13 (II) 16 (III) 9


14) கீழே தரப்பட்ட கடதாசியை படத்தில் காட்டியவாறு மடித்து வெட்டி பின் விரித்தால் கிடைக்கும் அமைப்பு யாது?





(I) (II) (III)




கீழே தரப்பட்ட கணிதச்செய்கையை அவதானித்து சரியான விடையின் கீழ் கோடிடுக





15)  இன் விலை (I) ரூ.80 (II) ரூ.60 (III) ரூ.120

16)  இன்விலை (I) ரூ.345 (II) ரூ.420 (III) ரூ.340


17)  இன் விலை என்ன? (I) ரூ.365 (II) ரூ.360 (III) ரூ.350

18) தரப்பட்ட தகவலை அவதானித்து ☐ இன் பெறுமானம் என்ன எனக்காண்க?



(I) 3
(II) 4
(III) 2


தரப்பட்ட கணிதச்செய்கையை அவதானித்து விடை தருக




19) ஜம்பு பழத்தின் விலை யாது? (I) 10.00 (II) 20.00 (III) ரூ.30.00

20) அப்பிள் 2 இனதும் அன்னாசி 2இனதும் விலை யாது? (I) 100.00 (II) 110.00 (III) 120.00


21) தரப்பட்ட தராசின் A இனதும் B இனதும் நிறையை அவதானித்து C இன் நிறை எதுவெனக் காண்க?



(I) 12kg (II) 16kg (III) 8kg

# வாழ்வின் எழுச்சித் திட்டத்தினூடாக மக்களின் வாழ்வாதாரம் மேம்படவேண்டும்

## காரைநகர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வாழ்வெழுச்சித் திட்டத்தினூடாக உதவிகளையும் கடன்திட்டத்தையும் பெறும் மக்கள் அவற்றை சரியாக பயன்படுத்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி காரைநகர் அமைப்பாளரும், பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வீரமுத்து கண்ணன் தெரிவித்தார்.

உதவும் கரங்கள் வாழ்வின் எழுச்சி கடன் திட்டத்தின் 5 ஆம் கட்ட நிகழ்வானது வாழ்வின் எழுச்சி சமுதாய அபிவிருத்தி வங்கி மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஒவ்வொரு பயனாளிக்கும் 50,000 ரூபா வீதம் 105 பயனாளிகளுக்கு வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பாரிய முயற்சியினால் வாழ்வின் எழுச்சி திணைக்களம் ஊடாக வாழ்வாதார வசதி குறைந்த மக்களுக்கு பாரிய வாழ்வதார உதவிகளை மேற்கொண்டு வருகின்றார் என்பது யாவரும் அறிந்த உண்மை. இவை அனைத்திற்குமே எமது அரசாங்கத்துடனான இணக்க அரசியலும் அமைச்சர் தேவானந்தா அயராத உழைப்புமே காரணமாகும்.

இது மட்டுமன்றி எத்தனையோ அபிவிருத்திகளை நாம் செய்துள்ளோம். செய்து வருகின்றோம், தொடர்ந்து செய்வோம். அத்துடன் நாம் கௌரவத்தோடு வாழ வழி சமைத்துக் கொடுப்பதற்கும் எமது இலக்கினை அடைவதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கைகளை பலப்படுத்துவதன் மூலம் இவை அனைத்தையும் நாம் சாதிக்க முடியும். அந்த வகையில் எமது வாக்குகளை எமது முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் வாழ்வின் எழுச்சி சமுதாய அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர், உதவி முகாமையாளர் சமுர்த்தி மகாசங்க முகாமையாளர், உதவி முகாமையாளர் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

# பயிர் அழிவிற்குள்ளான விவசாயிகளுக்கு நஷ்டஈடு

கடந்த சில வாரங்களாக ஏற்பட்டிருந்த காலநிலை சீர்கேடு காரணமாக பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாதிப்படைந்த விளைச்சல் நிலங்கள் மற்றும் பயிர்களுக்கு உரிய நஷ்ட ஈட்டை வழங்குவதன மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என விவசாயத்துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதவிர, உணவுப்பொருட்களுடன் விவசாயிகளுக்கு முட்டை, அரிசி போன்ற பொருட்களும் வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் விவசாயிகளுக்கு, அடுத்த பெரும்போகத்திற்கு தேவையான விதை போன்றவையும் வழங்கப்படவுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# வீதியில் வெள்ள நீர் போக்குவரத்துக்கு இடையூறு

(அச்சுவேலி)

அச்சுவேலி சந்நிதி வீதியூடாக தொண்டைமானாறு செல்லும் வீதியில் மழை நீர் தேங்கி நிற்பதால் அவ்வீதியூடாக போக்குவரத்தை மேற்கொளவோர் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீர் வற்றாது வீதிப்பகுதியில் தேங்கி நிற்பதால் இதனூடாகச் செல்லும் பாதசாரிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிப் பயணிகள் எனப் பலரும் பல்வேறு சிரமத்தின் மத்தியில் போக்குவரத்தை மேற்கொள்வதுடன் வாகனங்களும் மழைநீரில் கழுவப்பட்டுச் செல்வதால் அவை பழுதடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் வீதியில் தேங்கியுள்ள மழை நீரை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)




# ஜனாதிபதிக்கு ஆதரவளித்து முல்லையில் பிரசாரம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டம் புதுக்குடியிருப்பிலும் விசுவமடு சந்தியிலும் அண்மையில இடம் பெற்றது.

புதுக்குடியிருப்பில் இடம் பெற்ற பொதுக் கூட்டம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதுக்குடியிருப்பு பிரதேச அமைப்பாளர் அ.நீதன் ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றதோடு இதில் முன்னணியின் ஆதரவாளர்களும் அமைபபாளர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதில் பெரும் திரளான மக்களும் கலந்து கொண்டனர்.

மேலும் விசுவமடு சந்தியில் இடம் பெற்ற பிரசார நிகழ்வில் நாமல் ராஜபக்ஷ இசை வாகனத்துடன் வருகை தந்து இசை நிகழ்ச்சிகளை நடத்தியதுடன் பிரசார நடவடிக்கையையும் மேற்கொண்டனர்.

இந் நிகழ்வு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முல்லைத் தீவு மாவட்ட இணைப்பாளரும் ஜனாதிபதி இணைப்பாளருமான ச.கனகரத்தினத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது.

இதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முல்லை மாவட்ட தேர்தல் இணைப்பாளர் றங்கதுரை மற்றும் ஆதரவாளர்களும் அமைப்பாளர்கள் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (40)

## வாழ்க வளமுடன்

ஸ்ரீ

சிறாரின் பெயர் :- ..................................................

முகவரி :- ..................................................

பிறந்த ஆண்டு :- ..................................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# வணிகமயமாகும் பாடசாலைகள் கவனமெடுக்க வேண்டும் அதிகாரிகள்

பாடசாலைகள் தற்போது வணிகமயமாவதை காணக்கூடியதாக உள்ளது. இலவசக் கல்வியை வழங்க வேண்டிய பாடசாலைகளில் இலாபத்தை ஈட்டுகின்ற அல்லது விற்பனையை அதிகரிக்கும் செயறபாடுகள் அதிகரித்து வருவதைக் காண முடிகின்றது.

பாடசாலைகள் தற்போது அப்பாடசாலைகளின் புகைப்படத்தை தாங்கியதான அப்பியாசக் கொப்பிகள் அச்சடிக்கப்படுதல் என்கின்ற கலாசாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கலாசாரத்தின் அடிப்படையில் அவ்வாறான அப்பியாசக் கொப்பிகளை பாடசாலைகளில் விற்பனை செய்யவும் ஆரம்பித்துவிட்டன.

தவணை முடிவடைந்து பாடசாலைகளில் புதிய தவணை ஆரம்பமாகிய நிலையில் புதிய அப்பியாசக் கொப்பிகள் பாடசாலைகளில் மட்டுமே பெற வேண்டும் என்கின்ற கட்டளைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாணவனும் பாடசாலையின் புகைப்படம் தாங்கிய அப்பியாசக் கொப்பிகளையே பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இத்தகைய ஒரு நிலையில் பாடசாலைகளில் விற்பனை செய்யப்படுகின்ற அப்பியாசக் கொப்பிகள் அவற்றின் தரம் குறித்து கூறுகையில், அவை முதற்தரமான தாளில் அச்சிடப்பட்டுள்ளன. அதன் வடிவம் கவர்ச்சிகரமாய் அமைந்துள்ளன.

பாடசாலைகளில் விற்கப்படும் இத்தகைய கொப்பிகளின் விலையை நோக்கும்போதுதான் பெற்றோர்களிடம் பல்வேறு கருத்துக்கள் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய இதேதரம் வாய்ந்த கொப்பிகளை வெளியில் வாங்குகின்ற போது கொடுக்கப்படும் பணத்தை விடவும் அதிகளவிலான பணத்தை கொடுக்க வேண்டியுள்ளதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

அப்பியாசக் கொப்பிகளுக்கான விலை அதிகளவில் இருப்பதாகவே என பெற்றோர் கவலைப்படுகின்றார்கள். ஒரு ரூபா குறைந்த விலையில் எங்கு கிடைக்கின் றதோ அங்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்கான வசதி வாய்ப்புக்கள் நாட்டில் காணப்படுகின்ற போதிலும் இத்தகைய பாடசாலைகளின் செயற்பாடு மக்களை அதிக விலை கொடுத்து ஒரே தரமுடைய பொருளை வாங்கி வைப்பது குறித்து கோபம் கொள்ளச்செய்கின்றது.

மாணவர்கள் ஒரே வகையில் ஆடை அணிகலன்களில் வரவேணடும் என எதிர்பார்க்கின்ற பாடசாலைகள் ஒரே மாதிரியான கொப்பிகளைப் பயன் படுத்த வேண்டும் என எதிர்பார்ப்பதில் தவறில்லைத்தான். ஆயினும், ஒரே வகையான கொப்பிகளின் விலைகள் வெளியில் வாங்குகின்ற போது வெவ்வேறு வகை விலைகளில் கிடைக்கின்ற போது பாடசாலைகளில் விற்கும் கொப்பிகளில் விலையை விடவும் குறைவான வெவ்வேறு விலைகளில் கிடைக்கின்ற போது பெற்றோர் இவ்விடயத்தில் சற்று வேலை நேரத்தை மனதில் கொண்டிருப்பது இயல்பான விடயமேயாகும்.

பெற்றோரின் மனங்களிலே இருக்கும் விடயத்தை அவர்கள் உடனடியாக பாடசாலைக்கு தெரிவிக்கமாட்டார்கள் ஏனெனில் தமது பிள்ளைகள் அங்கு கற்பதால் தாம் கூறுகின்ற கருத்துக்கள் பிள்ளைகளிடம் பாதிப்பை ஏற்படுத்தி விடலாம் என்பதே அதன் அடிப்படை காரணம்.


இத்தகைய ஒரு நிலையில் பெற்றோர் பாதிப்படையாமல் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற விற்பனை செய்யப்படுகின்ற அப்பியாகசக் கொப்பிகளின் விலையை நிர்ணயித்து விற்பனை செய்ய வேண்டும் என்பது பெற்றோரின் அபிப்பிராயம்.

அப்பியாசக் கொப்பிகளை விற்பனை விலையை நிர்ணயம் செய்வது தமது வேலையல்ல அது கொப்பிகளை அச்சடித்து தருபவர்கள் அது சம்பந்தப்பட்டவர்கள் சேவை என்று கூறிவிட்டு தமது வேலை கொப்பிகளை விற்பனை செய்வதுதான் என பாடசாலைகள் செயற்படக் கூடாது மாணவர்களுக்கு பெற்றோருக்கு சுமையை மேலும் ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் பாடசாலைகள் ஈடுபடக்கூடாது என்பதில் கவனம் செலுத்த வேண்டிய கடப்பாட்டில் உண்மையையும் பாடசாலைகள் அறிந்து வைத்திருத்தல் அவசிய மானது.

(பூஞ்சிட்டு)

# தீவிரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கும்

## அமெரிக்க வெளியுறவுத்துறை





(வொஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் ஜோன் ஹெர்ரி இந்த மாதம் பாகிஸ்தான் செல்லவுள்ள நிலையில் பாகிஸ்தான் அரசு விரைவில் லஷ்கர்-இ-தொய்பா, ஜெயஷ்-இ.முகமது ஆகிய இயககங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார். ஜோன் ஹெர்ரி இந்த மாதம் பாகிஸ்தானில் நடக்கும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வார் என பாகிஸ்தான் வெளியுறவுத் துறை கடந்தவாரம் அறிவித்துள்ளது.

கடந்த காலங்ககளில் பாகிஸ்தானில் 2 இயக்கங்கள் வெளிப் படையாக தங்கள் செயறபாட்டை தொடங்கி உள்ளன.அந்த இயக்கங்களுக்கு ஆதரவாக பாகிஸ்தான் அரசு செயற்பட்டு வருகிறது. ஹபீஸ் செய்யத், மசூத் அசார் 2014 ஆம் ஆண்டு மிகப் பெரிய பொதுமக்கள் பேரணியை நடத்தினர்.

இந்த ஆண்டு பாகிஸ்தான் எல்லைக்குள் செயற்படும் அல் கொய்தா , தலிபான்கள் தொடர்புடைய லஷ்கர்இ-தொய்பா, ஜெயஷ் இ.முகமது போன்ற தீவிரவாத குழுக்களை தடுத்து நிறுத்தும் என அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் ஜான் ஹெர்ரி கூறி உள்ளார்.

# பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு விரைவில் தூக்குத் தண்டனை

பாகிஸ்தானில் 8 தீவிரவாதிகளின் , மரண தண்டனையை நிறைவேற்ற அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன்படி நாளை மற்றும் 13, 14, 15 ஆகிய திகதிகளில் 8 பேருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளவர்களின் பட்டியலில் அல்-கொய்தா அமைப்பைச் சேர்ந்த ஜுல்பிகர் அலியும் ஒருவர் ஆவார். கடந்த 2003ஆம் ஆண்டு கராச்சியில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகம் அருகே 2 பொலிஸாரைக் கொன்ற இவருக்கு 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

லஷ்கர்-இ-ஜாங்வி அமைப்பைச் சேர்ந்த முகமது ஹாஹித் ஹனிப், முகமது தல்ஹா ஹுசைன், கலீல் அகமது, முகமது சயீத் ஆகிய 4 பேரும் இந்தப் பட்டியலில் உள்ளனர். பாதுகாப்பு அமைச்சக அதிகாரி, ஓய்வுபெற்ற காவல் துறை துணை கண்காணிப்பாளர் மற்றும் அவரது மகன் உள்ளிட்டவர்களை கொலை செய்த வழக்கில் இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதுதவிர சிறுவனைக் கடத்திக் கொலை செய்த வழக்கில் தண்டனை பெற்ற பெஹ்ரம் கான், ஹபகத் ஹுசைன், 3 பேரை கொலை செய்த வழக்கில் தண்டனை பெற்ற அகமது ஆகி யோருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

# ஏயர் ஏசியாவின் மற்றொரு விமானம் 120 பயணிகளுடன் மயிரிழையில் தப்பியது

(ஜகார்த்தா)

கடந்த ஞாயிறன்று, இந்தோனேஷியாவில் ஏயர் ஏசியா விமானம் விபத்துக்குள்ளாகி, 162 பேரை பலிவாங்கிய நிலையில், இந்த வாரமும் அதாவது நேற்று முன்தினம் மீண்டும் அதே நாட்டில், அதே நிறுவனத் தின் விமானம், பயங்கர விபத் தில் இருந்து நூலிழையில், 120 பயணிகளுடன் தப்பியது.

இந்தோனேஷியா வின் சுரபயா நகரில், ஜுவாண்டா விமான நிலையத்தில் இருந்து, பாண்டுங் நோக்கி, ஏயர் ஆசியா விமானம் ஒன்று புறப்பட்டது. அதில், 120 பயணிகள் இருந்தனர். ஓடுதளத்தில் இருந்து விமானம் புறப்படத் தொடங்கிய சில நொடிகளில், திடீரென்று பயங்கர வெடிச்சத்தம் கேட்டது. இதையடுத்து, விமானம், வேகமாக பின்னோக்கி நகர்ந்தது. இதனால், பயணிகள் பீதியில் அலறினர்.

"விமான இயந்திரம் செயலிழந்துள்ளதால், விமானம் பறக்காது, என்று கூறி, பயணிகளை பத்திரமாக வெளியேற்றினர். தப்பித்தோம், பிழைத்தோம் என, பெருமூச்சு விட்டபடி வெளியேறிய பயணிகள், விமான நிலைய வரவேற்பறையில் தங்க வைக்கப்பட்டனர்.

சிறிது நேரத்தில் கோளாறு சரி செய்யப்பட்டு, விமானம் புறப்பட தயாராகி விடும் என்று ஏயர் ஏசியா தெரிவித்தது. ஆனால், நூலிழையில் உயிர் தப்பிய அதிர்ச்சியில் இருந்து மீளாத, 90 சதவீத பயணிகள், இலவசமாக அழைத்துச் சென்றாலும், அந்த விமானம் வேண்டாம் என, மறுத்து விட்டனர். இதனால், அவர்களுக்கு, பணம் திரும்ப தரப்பட்டது.




இதனிடையே, ஞாயிற்றுக் கிழமைகளில் சுரபயா - சிங்கப்பூர விமான சேவை மேற்கொள்ள, ஏர் ஆசியா நிறுவனத்திற்கு உரிமம் வழங்கவில்லை என, இந்தோனேஷியா தெரிவித்துள்ளது. விதிகளை மீறிச் சென்று, 162 பேரின் விதியை முடித்த ஏயர் ஆசியா மீது விசாரணை நடத்தவும் உத்தரவிட்டுள்ளது.

# துருக்கியில் 90 ஆண்டுகளின் பின் கட்டப்படுகிறது கிறிஸ்தவதேவாலயம்

ஐரோப்பா கண்டத்தில் உள்ளது துருக்கி முஸ்லிம் நாடு. அங்கு கடந்த 1923ஆம் ஆண்டுவரை ஒட்டோ மான் பேரரசு இருந்தது. அது முடிவுக்கு வந்த பிறகு அங்கு புதிதாக கிறிஸ்தவ தேவாலயங்கள் கட்ட அனுமதி வழங்கப்படவில்லை.

இங்கு ஏற்கனவே கிரேக்க பழமைவாதிகள், அமெரிக்கர்களின் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தேவாலயங்கள் உள்ளன. இந்த நிலையில் 90 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது அங்கு புதிதாக கிறிஸ்தவ தேவாலயம் கட்ட துருக்கி அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்தத் தேவாலயத்தை சிரிய இனத்தவர் இஸ்தான் புல் புறநகரான யெசில்காய் என்ற இடத்தில் மர்மரா கடற்கரைப் பகுதியில் கட்டவுள்ளனர். துருக்கியின் தென் கிழக்கு பகுதியில் இவர்கள் சுமார் 20 ஆயிரம் பேர் வரை வசிக்கின்றனர்.

உலகச் செய்திகள்

# பா.ஜ.க.வை பலப்படுத்த முயற்சி எடுப்பேன்

## நெப்போலியன் தெரிவிப்பு

(சென்னை)

தமிழக, பா.ஜ.க.வில், ஒரு இலட்சம் உறுப்பினர்களை சேர்ப்பேன் என, நடிகர் நெப்போலியன் கூறினார்.

தி.மு.க.,வில் இருந்த நடிகர் நெப்போலியன், சமீபத்தில் அக்கட்சியிலிருந்து விலகி, பா.ஜ.க.வில் சேர்ந்தார். இதையடுத்து, தன் இரசிகர் மன்ற கூட் டத்தை நேற்று முன்தினம் சென்னையில் நடத்தினார்.

சென்னை மயிலாப்பூரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் நடந்த கூட்டத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரி ரசிகர் மன்ற நிர்வாகிகள் மத்தியில் அவர் பேசியதாவது:

பிரதமர் நரேந்திர மோடியின் செயற்பாடுகளால், பா.ஜ.க, மீது மக்களுக்கு மரியாதை ஏற்பட்டுள்ளது. எனக்கும் மோடி மீது ஈர்ப்பு இருந்ததால், பா.ஜ.க,வில், இணைந்தேன். சர்வதேச அரங்கில், நம்நாட்டின் பெருமையை உயர்த்த, கடுமையாக உழைக்கும் மோடிக்கு, தமிழக மக்களின் ஒத்துழைப்பும் தேவை.

என் ரசிகர் மன்றம் சார்பில், தமிழகம் முழுவதும், ஒரு இலட்சம உறுப்பினர்களை பா.ஜ.க,வில் சேர்க்க வேண்டும். இதற்காக, அனைத்து மாவட்டங்களிலும், பொங்கலுக்குப் பின், உறுப்பினர் சேர்க்கை பிரசாரம் செய்ய உள்ளேன். என்றார்.

# போராட்ட குழுக்களின் அடாவடி லிபியாவில் 13 எகிப்தியர்கள் கடத்தல்

பியாவில் 34 ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வந்த கடாபியின் ஆட்சி கடந்த 2011ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. அன்று முதல் அங்கு உள்நாட்டு போராட்ட குழுக்கள் அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு தொடர்ந்து தாக்குதல் சம்பவங்களில் ஈடு பட்டு வருகின்றன.



இந்த நிலையில் லிபியாவில் உள்ள சிரிட்டே நகரில் ஒரு வீட்டுக்குள் துப்பாக்கிகளுடன் நுழைந்த கும்பல் அங்கிருந்த எகிப்து நாட்டைச் சேர்ந்த 13 கிறிஸ்தவர்களை வலுக்கட்டாயமாக கடத்திச்சென்றது. இந்தச் சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதனையடுத்து லிபியாவின் வெளியுறவு அமைச்சர் சமே சவுக்கிரி, தேவாலய அதிகாரிகளைச் சந்தித்து, கடத்தப்பட்டவர்களை மீட்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்.


# பாக்.இல் விமானத்தாக்குதல் 31 தீவிரவாதிகள் பலி

பாகிஸ்தானின் கைபர் பழங்குடியினர் பகுதியில் நிகழ்த்தப்பட்ட விமானத் தாக்குதலில் 31 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கூறுகையில், கைபர் மாகாணத்தில் திரா பகுதியில் தீவிரவாதிகளின் மறைவிடங்களைக் குறிவைத்து பாகிஸ்தான் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் 31 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் காயமடைந்தனர் என்று தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு ஜுன் மாதம் முதல் தலிபான்களுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவம் மற்றும் விமானப் படையினர் நிகழ்த்தி வரும் ஒருங்கிணைந்த தாக்குதல்களில் இதுவரை 1,500-இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏயர் ஏசியா விமான விபத்து இதுவரை 46 சடலங்கள் மீட்பு



© AP

விபத்தில் சிக்கிய ஏயர் ஏசியா விமானத்திலிருந்து 46 உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜாவா கடலில் விழுந்து விபத்துக்குள்ளான க்யூஇசட்8501 ஏயர் ஏசியா விமானத்திலிருந்து, தற்போது 46 சடலங்கள் மற்றும் அதன் சில உடைந்த பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து விமான போக்குவரத்து இயக்குநர் கூறுகையில், எண்ணெய்க் கசிவு ஏற்பட்ட இடத்தையும் விமானத்தின் பெரிய பாகங்கள் இரண்டையும் நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

நாங்கள் தேடிக்கொண்டிருந்த ஏயர் ஏசியா விமானத்தின் பாகங்கள் தான் இவை என்பதை உறுதியாக எம்மால் கூற முடியும் என்றும் தற்போது மீட்கப்பட்டுள்ள 46 பேரில் 4 பேரின் உடல்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

# வாழ்வாதாரத்தை வளப்படுத்த தலைமைத்துவப் பயிற்சி வழிகாட்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

தலைமைத்துவப் பயிற்சிகள் மூலம் தொழிற்துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க முன்வர வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறியை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான தலைமைத்துவப் பயிற்சிகள் அவசியமானதாகவேயுள்ளன.

இதனூடாக உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்யும் அதேவேளை, தொழிற்துறைசார்ந்தவர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் நுண்ணறிவுகளை வழங்குவதன் ஊடாக சுயதொழில்துறைகளை மேலும் வலுப்படுத்தி பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணச் செய்வதற்கு ஏதுவாக அமையும்.

அதுமட்டுமன்றி இந்தப் பயிற்சி நெறிகளை புதிய அனுபவங்களை பெற்றுக் கொண்டவர்களாக ஏனையவர்களும் பயன்பெறும் வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இன்றுள்ள அமைதிச் சூழலை பாதுகாத்து பலப்படுத்த வேண்டியது அவசியமானது என்றும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், இவ்வாறான தலைமைத்துவப் பயிற்சிநெறிகளையும் தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் அதனூடான பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் எல்லோரது ஒன்றிணைந்த ஒத்துழைப்பும், ஒத்தாசையும் முக்கியமானதாகவும் உள்ளது.

எனவே, கிடைக்கப் பெறுகின்ற இவ்வாறான சந்தர்ப்பங்களை உத்தியோகத்தர்களும், ஏனையோரும் உரியமுறையில் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனைக்கு அமைவாகவும் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினத்தின் வழிகாட்டுதலுக்கு அமைவாகவும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான இத்தலைமைத்துவப் பயிற்சிநெறி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முழுநாளாக நடைபெறும் இப்பயிற்சி நெறியில் பனை அபிவிருத்தி சபையின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், பனை அபிவிருத்தி சபை பொது முகாமையாளர் லோகநாதன், பனை அபிவிருத்தி சபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர் கோபாலகிருஷ்ணன், பனை ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் சிறிவிஜயேந்திரன் உள்ளிட்ட துறைசார்ந்தோர் உடனிருந்தனர்.

### செந்தில் தொண்டமானுக்கு நீதிமன்றம் பிடியாணை

ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானை கைது செய்யுமாறு, பண்டார வளை நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

பதுளை, எல்ல பகுதியில் தபால் விநியோகஸ்தரை தாக்கிய சந்தேகத்தின்பேரில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றிருந்தது.

# படைகளின் வெளியேற்றம் வடக்கில் அவசியம்

## அங்கஜன் இராமநாதன் சொல்கிறார்

(யாழ்ப்பாணம்)

இராணுவ வெளியேற்றமும், காணிகள் விடுவிப்பும் வடக்கில் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு நடவடிக்கையாகும் என்று வடமாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர்களாகிய எங்களை வரலாறு பிழை சொல்லக்கூடாது. எங்களது பிள்ளைகளுக்கு நல்ல ஒரு எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க நாம் அபிவிருத்தியையும், உரிமையையும் பெற எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களித்து அதன் மூலம் எதிர்காலத்தினை வளப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் 5 வருடங்களாக அபிவிருத்தியைப் பெற்றுள்ளோம். சில உரிமைகளையும் பெற்றுள்ளோம். இதை தொடர்ச்சியாகப் பெற நாம் ஜனாதிபதியை ஆதரிக்க வேண்டும்.

ஜனாதிபதி மீள்குடியேற்றம் தொடர்பில் 6 மாதத்திற்கு சரியான தீர்வைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்துள்ளார். எனது வீடும் உயர்பாதுகாப்பு பிரதேசத்தில் தான் இருக்கிறது. இது தொடர்பில் உரிய காலத்தில் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும். பேரின வாதக் கட்சிகள் தற்போது வெளியேறியுள்ள நிலையில் சாத்தியமாகும்.

எதிரே உள்ள பேரினவாத கட்சிகளினால் தமிழ் மக்களுக்கு இறுதி வரை விமோசனம் கிடைக்கப்போவதில்லை. மீண்டும தவறான வழிக்கு எம் மக்களை இழுக்கப்பார்க்கிறார்கள். மீள்குடியேற்றத்தில் ஜனாதிபதி வெகு விரைவில் தீர்வு தருவார். 2009 இல் இருந்து 2015 இற்கு இடையில் பெருமளவில் இராணுவக் குறைப்பு இடம்பெற்றுள்ளது. தேசிய பாதுகாப்பிற்கு அப்பால் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு அக்காணிகள் மக்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

2016, 2017, 2018 காலப்பகுதியில் இராணுவம் தேவையே இல்லாமல் போகலாம்.

உண்மையில் இராணுவ வெளியேற்றம் அவசியமானது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டிய விடயம். அதேபோல் காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதும் அவசியம். அரசியல் கைதிகள் சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ளமை போன்று அவரவர் வழக்குகள் விசாரணைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் விடுதலை செய்யப்படுவர். தற்போதும் பலர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். இது எல்லாம் ஜனாதிபதியால் எமது மக்களுக்காக செய்து தரப்படும் உரிமைகள். இதேபோல் மேலும் பல பல விடயங்களை நாம் கண்டிப்பாக ஜனாதிபதியுடன் பேசி பெற்றுக்கொடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ, 25)

## தமிழர்...

பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட அவர்கள் ஒரு வருடம் நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் எவ்வித மான அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்க முடியவில்லை.

அத்துடன் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் தாமே என சந்திரிக்காவும், ரணில் விக்ரமசிங்கவும், மைத்திரிபால சிறிசேனாவும் கூறிவருகின்றார்கள்.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவிற்கு ஆதரவளிக்கின்றார்கள் என தமக்கு தெரியாது இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனால், தற்போது கூட்டமைப்பினர் மீது தமிழ் மக்கள் அதிருப்தியுடனும் அவநம்பிக்கையுடனுமே இருக்கின்றார்கள் என்பதே உண்மையாகும்.

நாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்து வருகின்றோம். இவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷா வெற்றிபெறும் போதுதான் அபிவிருத்தியையும் வாழ்வாதாரத்திற்கான செயற்திட்டங்களையும் தொடர்ந்து முன்னெடுக்க முடியும்.

இதனிடையே கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது தமிழ் அரசியல் வாதிகளில் அதிக கூடிய விருப்பு வாக்குகளை பெற்றுக் கொண்டவன் நான் என்று தெரிவித்த அமைச்சர், எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காணவேண்டுமே ஒழிய இந்தியாவோ, அமெரிக்காவோ தீர்வு காணமுடியாது.

இதனடிப்படையில் தென்னிலங்கை நிலைவரப்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவார் என்பது உறுதியாகவுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

## தேர்தல்...

ஆயிரம் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அத்துடன், வாக்கெண்ணும் பணி மேற்கொள்ளப்படவுள்ள யாழ்.மத்திய கல்லூரியில் 44 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்கெண்ணும் பணிக்காக ஏறத்தாழ 2 ஆயிரம் உத்தி யோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்த உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் கலந்து ரையாடிய போது, வாக்களிப்பு நிலையம், வாக்கெண்ணும் நிலையம், அதனைச் சூழவுள்ள பிரதேசங்கள் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், நடைபெறவுள்ள தேர்தல் நீதியானதாகவும், அமைதியானதாகவும் நடைபெற வேண்டும் என்பதற்காக பொலிஸ் ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, நடைபெறவுள்ள தேர்தல் நீதியானதாகவும், நியாயமானதாகவும் நடைபெறுமென்ற நம்பிக்கையை அரச அதிபர் வெளியிட்டுள்ளார்.

தேர்தல் கடமையினை பொறுத்தவரையில், தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ள உத்தியோகத்தர்கள். வாக்குப் பெட்டிகளை வாக்கெண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக 150 தனியார் பேருந்துகளும், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளும், அரச திணைக்கள வாகனங்களையும் ஈடுபடுத்த இருக்கின்றதாக கூறினார்.

போக்குவரத்து மற்றும் ஏனைய விடயங்களும் பூர்த்தியடைந்துள்ள நிலையில், தேர்தல் காலங்களில் ஏதாவது முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட வேண்டுமாயின், அமைக்கப்பட்டுள்ள தேர்தல் முறைப்பாட்டு காரியாலயங்களில் முறைப்பாடுகளை தெரிவித்துக் கொள்ள முடியும்.

அதேவேளை, பொது மக்களின் சாதாரண போக்குவரத்திற்கு எந்தவித சிரமங்களும் ஏற்படாத வகையில், போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (25)

## மைத்திரியை...

கனவே எடுத்த தீர்மானத்தையே அறிவித்துள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். வவுனியாவில் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நான் அங்கத்துவம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதென்று முடிவெடுத்துள்ளது. ஆனால் அந்த முடிவில் எனக்கு உடன்பாடில்லை. தனிப்பட்ட ரீதியில் இந்தத் தேர்தல் தொடர்பாக அமைதியாக இருப்பது என்றே முடிவெடுத்தேன். ஆனால் என்மேல் சேறு பூச எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். இதனால் எனது உண்மை நிலையை தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. உண்மையில் இந்தத் தேர்தல் தொடர்பில் பலரும் பல்வேறு விதமான கருத்துக்களைக் கூறுகின்றனர். ஆனால் என்னைப் பொறுத்த வரை இந்தத் தேர்தலில் யார் வெற்றி பெற்றும் தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்கப்போவதில்லை. தமிழ் மக்கள் தேசியம் நோக்கிப் பயணிப்பவர்கள். எனவே இந்தத் தேர்தலின்போது இரு சிங்கள ஆட்சியாளர்களையும் நாம் ஏற்கவில்லை என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

## அதிகாரப்பகிர்வுக்கு...

க்கப்போவதாக அறிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் அதிகாரப் பகிர்வு தொடர்பாக தான் எந்த விதமான ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளவில்லை என்று கூறிய மைத்திரிபால சிறிசேன, வெற்றியின் பின்பு நாட்டின் ஒருமைப்பாட்டை காப்பதற்கு தனது அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்கிற உறுதிமொழியை வழங்குவதாகவும் அறிவித்தார்.

வடக்கிலிருந்து படையினரை அகற்றும் எண்ணம் எதுவும் தனக்கு இல்லையெனவும் மைத்திரிபால சிறிசேன மீண்டும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு தனது பொறுப்பிலேயே இருக்கும் எனவும் மைத்திரி குறிப்பிட்டுள்ளார். தேசிய பாதுகாப்பே எனது முன்னுரிமைக்குரிய விடயமாக காணப்படும். நாட்டை பிளவுபடவோ அல்லது விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்கவோ அனுமதிக்க மாட்டேன் என்றும் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்வது தொடர்பாக சிறுபான்மை கட்சிகளுடன் உடன்படிக்கை எதிலும் நான் கைச்சாத்திடவில்லை. என்னை ஆதரிக்கும் கட்சிகள் 100 நாள் தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையிலேயே எனக்கு ஆதரவு வழங்க முன்வந்தன. பௌத்த மதத்திற்கு முன்னுரிமையளிக்கும் அதேவேளை நாட்டின் ஏனைய மதங்களுக்கும் உரிய முக்கியத்துவம் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க...

குறிப்பிட்ட கட்டுரை பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெறவேண்டும் என்பதற்காக அமெரிக்கா பாடுபடுவதை காண்பிக்கின்றது என்றும் பொதுபலசேனா தெரிவித்துள்ளது.

# அழிவுகளின் சூத்திரதாரிகள் வேண்டுமா? அபிவிருத்திகளின் நாயகன் வேண்டுமா?

## தீர்க்கமான முடிவை எடுங்கள்



(கிளிநொச்சி)

இனக்கலவரங்களை நடத்திய ஆட்சியாளர்கள் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமா? அல்லது எமது நாட்டை அபிவிருத்தி செய்த ஜனாதிபதி மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமா? என்பதனை மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளருமான வைத்தியநாதன் தவநாதன் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

எதிர்வரும் எட்டாம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கு நாம் முகம்கொடுக்கப் போகின்றோம். இந்தத் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொது எதிரணியின் வேட்பாளராகிய மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பிரதான வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர்.

இந்தத் தேர்தலில், யுத்தத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். மக்கள் எடுக்கப் போகும் இந்த முடிவில்தான் அவர்களது எதிர்காலம் தங்கியுள்ளதாகக் கூறிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன்,

தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளர்கள் என்ற போர்வைக்குள் மறைந்திருப்பவர்கள், முன்னர் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள்.

இதற்கு எடுத்துக்காட்டாக ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர். இந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருக்கும்போதுதான் தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய இன அழிப்பு நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. 1983 ஜூலை கலவரத்தின்போது பல தமிழ் மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதற்கு ஐக்கிய தேசியக் கட்சிதான் காரணம். அப்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று கூறி தமிழ் மக்களை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். பொது எதிரணியின் அடுத்தவர் சந்திரிக்கா அம்மையார், இவரது ஆட்சிக் காலத்தில்தான் தமிழர்களுக்கு எதிராக பல கொலைகள் நடைபெற்றன குறிப்பாக செம்மணிப் படுகொலை. கிருஷாந்தி கொல்லப்பட்டதும் இவரது ஆட்சிக் காலத்தில்தான் நடைபெற்றது.

மீள்குடியேற்றத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் எமது மாகாணத்திற்கு கொண்டு வரப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கான சமுர்த்தித் திட்டம் மற்றும் வாழ்வின் எழுச்சி திட்டங்கள் ஊடாக மக்களின் வாழ்நிலைகள் முன்னேற்றமடைந்துள்ளன. இந்தத் திட்டங்களின் ஊடாக மக்கள் பல நன்மைகளைப் பெற்று வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை முப்பது வீதமான மக்களே சமுர்த்தி பயனை அனுபவித்து வந்தனர். தற்போது அந்த எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டு அறுபது வீதமான மக்கள் அந்த பயனை அனுபவிக்கப் போகின்றனர். தற்போது எமது மாவட்டத்திற்கு 11 ஆயிரத்து 800 பேர் புதிதாக சமுர்த்திப் பயனாளிகளாக உள்வாங்கப்பட்டுள்ளனர். இன்னும் சில தினங்களில் அவர்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு மக்கள் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் அனைத்தையும் நாம் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒத்துழைப்பே காரணம்.

தங்களின் நலன்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குகின்றதே தவிர, தமிழ் மக்களின் நலன்களுக்காக அல்ல.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை அரசாங்கம் முன்வைக்கவில்லை என கூறும் கூட்டமைப்பு இன்று பணத்திற்காக அதனை மறந்து மைத்திரிபாலவுக்கு ஆதரவு வழங்குகின்றது. எனவே, இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரட்டை முகம் தெட்டத் தெளிவாக வெளிப்படுகிறது.

எனவே, இனிவரும் காலங்களிலாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் உணர்ச்சிப் பேச்சுக்களுக்கும், உசுப்பேத்தல்களுக்கும் மக்கள் சென்றுவிடாமல் தமது எதிர்காலம் தொடர்பாக தூரநோக்குடன் சிந்தித்து முடிவுகளை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் சபாநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் இராமச்சந்திரன் உள்ளிட்ட கிராம மட்ட மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருமளவு பொது மக்கள் கலந்துகொண்டனர்.

# மகிந்தவுக்கு ஆதரவாக அலையென திரண்ட மக்கள்

## முழங்காவிலில் நேற்று

(முழங்காவில்)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நேற்று முழங்காவிலில் மாபெரும் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் பங்கேற்று தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

பிற்பகல் 4.00 மணிக்கு முழங்காவில் நாச்சிக்குடா சந்திப்பகுதியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பூநகரி தெற்கு பகுதி கிராமங்களான ஜெயபுரம் வடக்கு, ஜெயபுரம் தெற்கு, வலைப்பாடு, கிராஞ்சி, முழங்காவில், நாச்சிக்குடா, இரணைமாதாநகர், கரியாலை நாகபடுவான் சோலை, பல்லவராயன்கட்டு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் திரண்டுவந்து தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

அத்தோடு தமது வ்ாக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே என்ற செய்தியை மக்கள் உணர்வுபூர்வமாக கோஷங்கள் மூலம் வெளிப்படுத்தினர். இதில் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை. தவநாதன், பூநகரி பிரதேசசபை உறுப்பினர்களான காசிம் மற்றும் இராசலிங்கம் ஆகியோரும் மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

# மனித உரிமை பணியாளர்களின் வீடுகளுக்கு முன்பு நாய்த் தலைகள்

(கொழும்பு)

இலங்கையின் இரு பிரபல மனித உரிமை பணியாளர்களின் வீடுகளுக்கு முன்பாக துண்டிக்கப்பட்ட நாயின் தலைகளை இனந்தெரியாத நபர்கள் வைத்துவிட்டு சென்றுள்ளனர். ஜனாதிபதி தேர்தல் வேளையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் அச்சத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சி என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரிட்டோ பெர்ணாண்டோ, பிரசங்க பெர்ணாண்டோ ஆகியோரின் வீடுகளுக்கு முன்பாகவே இவ்வாறு நாய்த் தலைகள் வைக்கப்பட்டுள்ளன.

# வாக்களிக்க வசதியாக அரச ஊழியர்களுக்கு விடுமுறை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக அரச ஊழியர்களுக்கு நான்கு மணிநேர விடுமுறை வழங்கப்படல் அவசியம் என தேர்தல்கள் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச பிரிவின் விசேட விடுமுறை தொடர்பான நிறுவன சட்டத்தின் XII அதிகாரத்தின் 12.3 பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கமைய இவ்விடுமுறை வழங்கப்படுகிறது.

அதற்கமைய பணியிடத்திற்கு 40 கிலோ மீற்றர் தொலைவில் அல்லது அதற்கு குறைவான தூரத்தில் வசிப்போருக்கு சம்பளத்துடன் கூடிய அரை நாள் விடுமுறையும் 100-150 கிலோ மீற்றர் தொலைவில் வசிப்போருக்கு சம்பளத்துடன் கூடிய ஒன்றரை நாள் விடுமுறையும் 150 கிலோ மீற்றருக்கு அதிகமான தொலைவில் வசிப்போருக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறையும் வழங்கப்பட வேண்டும்.

இது தவிர நாட்டின் சில பிரதேசங்களில் வசிப்போர் சென்று வாக்களித்து விட்டு மீண்டும் திரும்ப 3 நாட்கள் தேவையாக இருக்கும் பட்சத்தில் வழங்கப்பட வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடுமுறை அனைத்து தனியார் நிறுவனங்களுக்கும் செல்லுபடியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல்வாதிகள் உட்பட 135 பேர் இதுவரை கைது

## தேர்தல் வன்முறைகளுடன் தொடர்பு

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைகள் தொடர்பில் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட 14 பிரதேச அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது.

இதுவரை 320 தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர். அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய 135 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் சட்டம் மீறப்பட்டமை குறித்து ஆயிரத்து 96 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 116 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டார்.

இதேவேளை, தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 256 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் தமது அமைப்பிற்கு 797 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி சுட்டிக்காட்டினார்.

# வாக்கு எண்ணும் மத்திய நிலையங்கள் மாவட்ட ரீதியான விபரங்கள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின்போது மா்வட்ட ரீதியில் வாக்குகளை எண்ணும் மத்திய நிலையங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் பெயர் விபரங்களை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன்படி கீழ் குறிப்பிடப்படும் பாடசாலைளில் வாக்குகள் எண்ணப்படவுள்ளன.

கொழும்பு மாவட்டம் - றோயல கல்லூரி, டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி

கம்பஹா மாவட்டம் - பத்தள கெதர வித்யாலோக வித்தியாலயம்

களுத்தறை மாவட்டம்- தெதியவல மியூசியஸ் வித்தியாலயம்

கண்டி மாவட்டம்- சில்வெஸ்டர் கல்லூரி ஹேமா மாலி பாலிகா வித்தியாலயம்.

மாத்தளை மாவட்டம்- கிறிஸ்தேவ வித்தியாலயம்.

நுவரெலிய மாவட்டம்- காமினி தேசிய பாடசாலை

காலி மாவட்டம்- இருதய கன்னியர் மடம்

மாத்தறை மாவட்டம்- சுஜாதா பாலிகா வித்தியாலயம்

அம்பாந்தோட்டை மாவட்டம்- சுவி தேசிய பாடசாலை

யாழ்ப்பாணம் மாவட்டம்- யாழ் மத்திய கல்லூரி

முல்லைத்தீவு மாவட்டம்- முல்லைத்தீவு மகா வித்தியாலயம்

மட்டக்களப்பு மாவட்டம் - மட்டக்களப்பு இந்து மகா வித்தியாலயம்

திருகோணமலை மாவட்டம் - விபுலானந்தா மகா வித்தியாலயம்

குருநாகல் மாவட்டம் - மலியதேவ ஆண்கள் பாடசாலை, சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயம்

புத்தளம் மாவட்டம்- ஸெய்னம்ப் மகளிர் வித்தியாலயம்- புனித எண்ரூ மகா வித்தியாலயம்

அநுராதபுரம் மாவட்டம் - அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயம்

பதுளை மாவட்டம் - பதுளை மத்திய மகா வித்தியாலயம்

மொனராகலை மாவட்டம்- மொனராகலை ரோயல் கல்லூரி

கேகாலை மா்வட்டம்- கேகாலை பாலிகா வித்தியாலயம், சுவர்ண ஜயந்தி மகா வித்தியாலயம்

இந்துப் பாடசாலைகள் அனைத்தும் ஜனவரி 7ஆம் திகதி மூடப்பட்டு ஜனவரி 12 ஆம் திகதியே மீண்டும் திறக்கப்படும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.